# நம் வழி வேளாண்மை

பருவம் 30 | ஏப்ரல் – ஜூன் 2020 | இதழ் 1

## ஆரோக்ய கசாயம்



புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், அம்மாபட்டினம் கிராமத்தில் ஆரோக்ய கசாயம் விநியோகிக்கும் கால்நடை தன்னார்வலர்கள் ரேகா மற்றும் பாரதி

***இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை***

# நம் வழி வேளாண்மை

பருவம் 30 ஏப்ரல் – ஜுன் 2020 இதழ் 1

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**

### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

### நம்வழி வேளாண்மை குழுமம்
### பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலைபேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**
Prof. Anil Gupta,
**Honey Bee,**
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org

## தர்மத்தின் அளவு கோல் எது?

ஒரு ஏழை விவசாயி தனது மகளின் திருமணத்திற்கு, தர்ம குணம் படைத்த தனது மன்னனிடம் பொருள் உதவி பெற எண்ணினார். தலைநகருக்கு புறப்பட்டார். வழியில் சாப்பிட ரொட்டியை கட்டிக் கொண்டார். வழி நெடுக, கடவுளே திருமணத்திற்கு வேண்டிய அளவு பணம் தர மன்னர் சம்மதிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டே நடந்து சென்றார். பசியெடுக்கவே, ஒரு குளக்கரையில் அமர்ந்து ரொட்டியைக் கையில் எடுத்தார். மனதிற்குள், இந்த உணவைக் கொடுத்த கடவுளுக்கு நன்றி, என்றார். அப்போது நாய் ஒன்று அவர் எதிரில் வந்து நின்றது. இரக்கப்பட்ட அவர் ஒரு ரொட்டியை அதன் முன் வீசினார். ஒரே விழுங்காக உள்ளே தள்ளிய நாய், மீண்டும் ஆவலுடன் பார்த்தது. விவசாயி அத்தனை ரொட்டியையும் நாய்க்கே கொடுத்து விட்டார். ராஜா அவர் தகுதிக்கு தானம் கொடுத்தால், பிரஜையான நாமும் முடிந்ததை செய்வது தானே முறை என தனக்குள் சொல்லிக் கொண்டார். பசியுடன் தலைநகரை அடைந்தார். பிறகு மன்னனைச் சந்தித்து தான் வந்த விஷயத்தை தெரிவித்தார். மன்னன் “என்னிடம் தர்மம் கேட்டு வந்துள்ளீர்களே நீங்கள் ஏதாவது தர்மம் செய்திருந்தால் சொல்லுங்கள். அதை நிறுக்கும் தராசு ஒன்று என்னிடம் இருக்கிறது. அது எந்த அளவு எடை காட்டுகிறதோ, அந்த அளவுக்கு தங்கம் வாங்கிக் கொள்ளலாம்” என்றார். வழியில் நாய் ஒன்றுக்கு உணவு அளித்தேன். எனவே நான் ஏதும் பெரிதாக தர்மம் செய்யவில்லை என்றார் விவசாயி. உங்கள் பசியைப் பொறுத்துக் கொண்டு நாய்க்கு உணவிட்டதும் புண்ணியமே என்ற மன்னன் தராசைக் கையில் எடுத்தார். ஒரு தட்டில் விவசாயி செய்த தர்மத்தையும், மறுதட்டில் தங்கத்தையும் வைத்து நிறுத்தினான். கஜானாவில் இருந்த தங்கம் முழுவதும் வைத்தும் கூட தராசுத்தட்டு சமமாகவில்லை. வியந்த மன்னன், உங்களைப் பார்த்தால் சாதாரணமானவராக தெரியவில்லை. என்னைச் சோதிக்க வந்திருக்கும் தாங்கள் யார்? என்றான். அப்போது தர்மதேவதை அங்கு தோன்றினாள். மன்னனே தராசில் நிறுத்துப் பார்ப்பது அல்ல தர்மம். கொடுத்தவரின் மனமே அதன் அளவுகோல். இவர் மனம் மிகவும் பெரியது. அவர் என்ன கேட்டு வந்துள்ளாரோ, அதைக் கொடுத்தால் போதுமானது என்றாள். இதை ஏற்ற மன்னன், விவசாயிக்கு வேண்டிய அளவு தங்கம் கொடுத்து வழியனுப்பினான்.

## கொரோனாவும் கிராமப் பொருளாதாரமும்

கொரோனா ஊரடங்கு காலத்தில் அயராது உழைப்பவர்கள் மருத்துவர், செவிலியர், காவலர், துப்புறவு பணியாளர்கள். இத்துடன் விவசாயிகளும் தங்கள் உழைப்பை தொடர்ந்து செய்து வந்ததால் நமக்கு தேவையான பால், காய்கறிகள், பழங்கள் கிடைத்து வருகின்றன. பலசரக்கு கடைக்காரர்கள், காய்கறி, பழங்கள் கூடைகளில், தள்ளுவண்டிகளில் விற்பனை செய்பவர்களின் பணியும் குறைவானதல்ல. இதனால் நமக்கு அத்தியாவசியப் பொருட்கள் தொய்வின்றி கிடைத்து வருகின்றன. கொரோனோவினால் அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டனர். விவசாயிகளுக்கு போக்குவரத்து இல்லாதலால் இடு பொருட்கள், தீவனம் போன்றன ஸ்தம்பித்தது. விளைவிக்கப்பட்ட பூக்கள் பறித்து நல்ல விலைக்கு விற்க முடியவில்லை. கோழி, மீன் வியாபாரம் தடைபட்டது. நெசவாளர்களுக்கு தறி இயக்க நூல் கிடைக்கவில்லை. ஜவுளிக்கடைகள் திறக்காதலால் சேலை, வேஷ்டி கொள்முதல் இல்லை. இதனால் அவர்களுக்கும் வேலையில்லை. கொரோனோவிற்கு அடுத்து என்ன மாற்றம் ஏற்படப்போகிறது. வேலையாட்கள் கிடைப்பது அரிதாகும். இடுபொருட்கள் விலை கூடும். விவசாயப்பொருட்களுக்கு சரியான விலை கிடைக்காது. அதே சமயம் இயற்கை வேளாண்மைக்கும், புதிய உத்திகளுக்கும் சுய சார்பு முறைக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும். இந்த இலக்கை நோக்கி நம்வழி வேளாண்மை கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக பயணித்து வருகிறது. இச்சமயம் அரசுக்கு கீழ்க்கண்ட பரிந்துரைகளையும் முன் வைக்கிறது:

1. மகாத்மா காந்தி 100 நாள் வேலைத்திட்டத்தில் இயற்கை வேளாண்மை உத்திகள் சேர்க்கப்பட வேண்டும். மூலிகைப்பூச்சி கொல்லி மருந்து, பஞ்சகவ்யா, கால்நடைகளுக்கு மசாலா உருண்டை, மூலிகை குடற்புழு மருந்து தயார் செய்ய வைத்து கால்நடைகளுக்கு அளித்தல். கால்நடை மந்தைகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லுதலை சேர்த்தல், தீவனக்கரணைகள் நடவு செய்தல் போன்றன சேர்க்கப்பட வேண்டும்.

2. ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது ஒரு வாரச்சந்தையை புதிதாக அல்லது பழைய சந்தையைப் உயிர்ப்பித்தல் செய்ய வேண்டும்.

3. சுய சார்பிற்காக நடத்தப்படும் அனைத்து கிராம தொழில்களுக்கும் உதவிகளும் தந்து பாதுகாப்பு தர வேண்டும்.

4. விவசாயக் கருவிகள் குறைந்த வாடகைக்கு கிராமங்களில் கிடைக்க சேவா மையங்களை ஊக்குவிக்க வேண்டும்.

## சுத்தம் சுகம் தரும்

தற்சமயம் பல இடங்களில் கொரோனா வைரசால் பலர் நோய் தொற்று ஏற்பட்டும், குடியிருப்பு பகுதிகள் மூடப்பட்டும், வெளியூர் சென்றவர்கள் போக்குவரத்து இல்லாமலும் ஏற்படும் அவலங்களுக்கு எல்லையில்லை. இது போன்ற துன்பங்கள் நமக்கு இல்லாமலிருப்பதற்கு இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். இனியும் இது போன்ற அவலங்கள் யாருக்கும் ஏற்படாமலிருக்க சில வழிகளை கடைபிடிக்கலாம்.

1. புற சுத்தம் : வெளியில் சென்று வந்தால் குளித்தல், சோப்பு போட்டு கை கழுவுதல், சமூக இடைவெளி பின்பற்றுதல்

2. அக சுத்தம்:

ஆரோக்யமான உணவு. ஒரு வேளையாவது சமைக்காத இயற்கை உணவு. இரவு உணவு தூங்கும் முன் 3 மணி நேரம் முன்னரே சாப்பிட்டு விட வேண்டும். உணவு ஜீரணம் ஆன பின் தூங்குவது சிறந்தது.

**ஆரோக்ய தேநீர் / மூலிகை கசாயம் :**

சுக்கு 10 கிராம், மிளகு 10 கிராம், திப்பிலி 10 கிராம் தூள் செய்து 1 லிட்டர் நீரில் கொதிக்க விட வேண்டும். இத்துடன் வெல்லம் 100 கிராம், எலுமிச்சம்பழச்சாறு 10 மி.லி. உடன் சேர்த்து சில நிமிடங்கள் கொதிக்க விட்டு பின்னர் வடிகட்டி தேநீராக அருந்தலாம். காய்ச்சல், சுவாச பிரச்சனை உள்ளவர்கள் ஒரு நாளைக்கு 3 தடவை குடித்து வர வேண்டும்.

3. **ஆத்மசுத்தம் :** உண்மை, யாருக்கும் ஹிம்சை செய்யாமல் இருத்தல், உயிர் கொல்லாமை, பிறருக்குதவும் இரக்க குணம், கோபமின்மை, காமமின்மை (பிரம்மச்சர்யம்), அதிகாலை எழுதல், செய்யும் தொழில் தெய்வம் என இவைகளை கடைபிடிக்கலாம். இந்த சுத்தம் உடம்பிற்கும், மனதிற்கும் உறுதி, வலுவை கொடுக்கும். முடிவில் நோய் எதிர்ப்பு சக்திக்கு வழி கொடுக்கும்.

## கொரோனா வந்த பின் வருந்துவதை விட வருமுன் காப்போம்




நம் முன்னோர்கள் நீண்ட காலம் மருந்து மாத்திரைகளே இன்றி நீண்ட காலம் ஆரோக்யமாக வாழ்ந்தனர்! எப்படி? அவர்களெல்லாம் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்க்கை முறையினை கடைபிடித்தனர். உடல் வியர்வை வெளியேற நன்கு உழைத்தனர். நல்ல உணவை நன்றாக உண்டனர்.

உறங்க வேண்டிய நேரத்தில் உறங்கினர். கண்ட உணவுகளை வயிற்றில் போட்டதில்லை. கண்ட எண்ணங்களையும் மனதில் போட்டதில்லை. உண்ணும் உணவை மருந்தாக உண்டனர். நல்ல எண்ணங்களை, பழக்கவழக்கங்களை கடைபிடித்து பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுத்து வளர்த்தனர். இன்று எங்கும் எதிலும் செயற்கை மயமாகிவிட்ட உலகின் மருத்துவர்களுக்கே புரியாத பல வியாதிகளின் கோரப்பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறோம். இன்று உலகமே சொல்லும் ஒரே வார்த்தை உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்வது மட்டும் தான். நம் முன்னோர்களின் அறிவுரைகளைப் புறந்தள்ளிவிட்டு எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று மனிதர்கள் ஆடிய ஆட்டம் தான் இன்று கொரோனா வைரஸிடம் அடங்கி போய் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறோம். இப்படி எத்தனை நாள் தான் முடங்கி இருக்க முடியும்? எத்தனை நாள் அரசாங்கம் இலவசமாக பொருட்கள் வழங்க முடியும்? பல விதமான கட்டுப்பாடுகளுடன் அனைத்தையும் வழக்கம் போல இயங்கலாம் என அரசும் சொல்லிவிட்டது.

இனி அவரவர் வேலைகளை செய்ய துவங்க போகிறோம். கொரோனா வைரசுடன் இணைந்து வாழப்போகிறோம். இது நம்மை பாதிக்காமல் இருக்க பெரிய அளவில் செலவு இல்லாமல் நம்மையும் நம் குடும்பத்தினரையும் எப்படி பாதுகாத்து கொள்ளலாம் என்ற சில பயனுள்ள எளிதில் கடைபிடிக்கக்கூடிய வழி முறைகளையும், உணவு முறைகளையும் கூறுகிறேன். முதலில் வெளியில் சென்றால் முகக்கவசம் அணிவது, கைகளை சோப் கொண்டு கழுவுதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல் போன்ற வழிமுறைகளை தினந்தோறும் இணைந்து வாழப்பழகவேண்டும். இது அடிப்படையான நெறிமுறையாகும். இதனுடன் கடைபிடிக்க வேண்டியன:

**1) உடலின் உள்ளுறுப்புக்கள் தூய்மை**

அதிகாலை எழுந்தவுடன் பல் துலக்கிவிட்டு நல்ல சுத்தமான தண்ணீர் காய்ச்சி வெதுவெதுப்பாக 2 கப் அருந்தவும். பின்னர் மலஜலம் கழித்த பின் சுக்குமல்லித் தேனீர் ஒரு கப் அருந்தலாம். அல்லது ஆரோக்கிய கசாயம் அருந்த வேண்டும்.

**2) சுவாசப் பாதைத் தூய்மை**

காற்றோட்டமான இடத்தில் அமர்ந்து மூச்சுப்பயிற்சி ஒரு 10 நிமிடங்கள் செய்யலாம். இடது பக்க நாசி துவாரத்தை மூடிக்கொண்டு வலது பக்க நாசி வழியாக சுவாசத்தை உள்ளிழுத்து வலது பக்க நாசி துவாரத்தை மூடிக் கொண்டு இடது பக்க நாசி வழியாக சுவாசத்தை வெளி விட வேண்டும். இது ஒரு சுற்றாகும். இப்படியாக மாற்றி மாற்றி ஒரு 10 சுற்றுக்கள் செய்யலாம். சுவாசப்பயிற்சியை காலை மாலை இரு வேளைகள் வயிறு காலியாக இருக்கும்போது செய்யவும்.

**3)காலை உணவு**

தினசரி காலை உணவில் 2 கப் சிறுதானிய சத்து மாவுக் கஞ்சி இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் பல விதமான சத்து மாத்திரைகளில் உள்ள (விலை அதிகமான) உயர்தரமான சத்துக்கள் அனைத்தும் இந்த சிறு தானியங்களில் உள்ளன. இந்த சிறு தானியம் தான்

இன்று இல்லை. உங்களுக்கு எந்த தானியம் கிடைக்கிறதோ அந்த தானியத்தில் கஞ்சி செய்தும் அருந்தலாம். அதனுடன் சேர்த்து 2 இட்லி அல்லது 1 கப் பொங்கல், சாம்பார் சேர்த்து சாப்பிடலாம். புதினா, மல்லி இலை, கறிவேப்பிலை சேர்த்து செய்த சட்னி செய்து சாப்பிடலாம்.

**4) மதிய உணவு**

சிறுதானிய அரிசியில் தயார் செய்த சாதம் அல்லது புழுங்கல் அரிசி சாதத்துடன் மிளகு ரசம், பூண்டு குழம்பு ஏதாவது ஒரு கீரை அவசியம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். தயிரோ அல்லது மோர் ஒரு கப் அருந்தலாம்.

**5) மாலை சிற்றுண்டி**

ஏதாவது ஒரு சுண்டல் அல்லது வெள்ளரி, கேரட், முட்டைகோஸ், வெங்காயம் கலந்த காய்கறி சாறுடன் மிளகு சேர்த்து ஒரு கப் சாப்பிடலாம். இத்துடன் ஆரோக்கிய கசாயம் அல்லது இஞ்சி தேனீர் பானம் அருந்தலாம்.

**6) இரவு உணவு**

சப்பாத்தி அல்லது சம்பாரவை உப்புமா ஒரு கப் சாப்பிடலாம். இயற்கையில் பருவத்தில் என்ன பழம் கிடைக்கிறதோ அந்த பழத்தை சாப்பிடலாம். முக்கியமாக தினமும் 2 வாழைப்பழங்களை சாப்பிடலாம்.

**7) பொதுவான சில குறிப்புகள்**

நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், ஆரஞ்சு, பேரீச்சை, திராட்சை போன்ற பழங்கள் சேர்த்துக் கொள்ளலாம். விலையும் குறைவுதான். அனைவரும் சாப்பிட்டு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்ளலாம். நோய் எதிர்ப்பு சக்திக்கு வைட்டமின்–D அவசியம். இதற்கு வெயில் படாமல் வீட்டில் இருப்பவர்கள் 15 நிமிடங்களாவது வெயில்படுமாறு செய்யலாம். 30 நிமிடங்கள் அவசியம் நடை பயிற்சி தினமும் செய்யலாம். நடைப்பயிற்சியானது எந்த செலவுமே இல்லாத மிகப்பெரிய மருத்துவம் என்றே சொல்லலாம். நடைப்பயிற்சி செய்வதால் இரத்த ஓட்டம் அதிகரித்து உடல் முழுவதும் பிராணவாயு நன்கு செல்வதற்கு முடியும். மேலும் கொழுப்பு அதிகரிக்கும் சர்க்கரை, இரத்த அழுத்தம் போன்ற நோய்களும் கட்டுக்குள் வரும்.

ஆர். ராஜேஸ்வரி இரவிகுமார்
எண்; 74 ஜீ.எம்.எம்.எம் காடன்
கருகுடி, திருவையாறு– 613204
தஞ்சாவூர் மாவட்டம், செல் : 8608260308

## பஞ்சகவ்யா கலக்கும் கருவி

கோயமுத்தூர் மாவட்டம், அன்னூர் மேட்டுப்பாளையம், தொப்பம்பட்டியில் வசித்துவரும் ரமேஷ்குமார் பஞ்சகவ்யா கரைசலை நித்தமும் கலக்குவதற்கு ஒரு கருவியை உருவாக்கியுள்ளார். இதில் நேரத்தை செட் செய்து வைத்துவிட்டால் அதன்படி இந்த கருவி தானாக சுற்றி நின்று விடும். இதற்கு 407 வேனில் உள்ள வைப்பர் கருவி உதவி கொண்டு இயக்கலாம். இதற்கு செலவு ரூ. 1500 ஆகும். புதிய வைப்பர் கருவி வாங்கி செய்வது என்றால் ரூ. 5000 வரை செலவாகும்.

ரமேஷ்குமார்
வடக்கு தோட்டம்
605–ஏ, தொப்பம்பட்டி அன்னூர்,
அன்னூர் மேட்டுப்பாளையம் (வழி)
கோயமுத்தூர் மாவட்டம்–641653
செல் – 9042001552

## சூப்பர் நேப்பியர் தீவனப்புல்

தேனி சூப்பர் நேப்பியர் (கரணை 0.80 பைசா) ஆசியாவிலுள்ள நேப்பியர் புல்களிலே அதிகமான புரத சத்து (16 சதவீதம் முதல் 18 சதவீதம் ) அதிக மகசூல் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு சுமார் (200 டன்) கிடைக்கும். நம்மிடம் தற்போது உள்ள கோ 4 கோ 5 புல்லுடன் ஒப்பிடும்போது இதன் மகசூல் புரதசத்து ஆகியவை இரண்டு மடங்கு கூடுதலாக கிடைக்கும். உதாரணத்திற்கு ஒருவர் ஏனைய பசுந்தீவனத்துடன் கோ–4, கோ–5 புல்லை விவசாயம் செய்து ஓர் ஏக்கருக்கு சுமார் 6 மாடுகளும் 20 ஆடுகளும் பராமரிக்க முடியும் என்றால் ஏனைய பசுந்தீவனதுடன் சூப்பர் நேப்பியர் புல்லை விவசாயம் செய்து 12 மாடுகளும் 40 ஆடுகளும் பராமரிக்க முடியும். சுருக்கமாகச் சொன்னால் கோ–4, கோ–5 புல்லை காட்டிலும் இரண்டு மடங்கு அறுவடை தரக்கூடியது. இதனுடைய பலன்களை இப்போது பார்போம்.

1. இத்தீவன புல்லின் புரத சத்து 14–18 சதவீதம் ஆகும். இது ஆசியாவில் இருக்கும் அனைத்து

வகையான நேப்பியர் புற்களை விட இரண்டு மடங்கு அதிக மகசூல் தரக்கூடியது.

2. ஓர் ஏக்கருக்கு சுமார் 200 டன் பசுந்தீவனம் கிடைப்பதால் இப்புல்லை (நேப்பியர் புல்களின் ராஜா) என்று தாய்லாந்து நாட்டில் அழைக்கிறார்கள்.

3. ஓர் ஏக்கருக்கு 200 டன் பசுந்தீவனம் கிடைப்பதால் சுமார் 30 கறவை மாடுகளின் தேவையை இப்புல் பூர்த்தி செய்ய வல்லது

4. இதன் மூலமாக பால் பண்ணையாளர்கள் நிறைய பணத்தை சேமிக்க முடியும்.

5. நீரில் கரையும் கார்போஹைட்ரேட் 18 சதவீதம் இருப்பதால் இத்தீவனப்புல் சைலேஜ் செய்ய மிகவும் ஏற்றது.

இப்புல் கரணைகளை ஆர்டர் செய்ய 9659656611

**நேப்பியர் புல் என்றால் என்ன**

இது யானை புல் மற்றும் கம்பு ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்ட நேப்பியர் புல் ஆகும். இந்த கரணை கிடைக்கும் இடம் தேனி மாவட்டம், போடி மீனாட்சிபுரம் (பொட்டல்களம்) கிராமத்தில் கிடைக்கும். தமிழகம் முழுவதும் எந்த ஊராக இருந்தாலும் நல்ல முறையில்

ஏ.கே.ஆர் ட்ரான்ஸ்போர்ட், ஏ.பி.டி ட்ரான்ஸ்போர்ட் வி.ஆர்.எல் ட்ரான்ஸ்போர்ட், எம். எஸ். எஸ் ட்ரான்ஸ்போர்ட், கே.பி.என். ட்ரான்ஸ்போர்ட்

மற்றும் அருகாமையில் உள்ள ஊர்களுக்கு ரெகுலர் லாரி சர்வீஸ் மூலம் டெலிவரி செய்யப்படும்.

சிவபாண்டியராஜா

ICICI Bank, BranchTheni

வங்கி கணக்கு எண்: 622505500090

IFSC Code : ICIC0006225

தேனி மாவட்டம். Cell : 9659656611

## இரு, நான்கு சக்கர வாகனமும் பயிர் பாதுகாப்பும்

விழுப்புரமாவட்டம், வாழப்பட்டு கிராமத்தில் வசித்து வரும் அங்கப்பன் (42). என்ன தலைப்பைப் பார்த்த உடன், என்னடா இவன் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுறான் என்ற சின்ன நினைப்பு உங்கள் எண்ணத்தில் வந்து போனால் தப்பில்லை. வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும்



என இறுமாப்பு இருந்தால் மொட்டைத் தலையா, முழங்காலா எது வென்றாலும் சாத்தியமே. அப்படி விவசாயத்தில் வித்தியாசமாக யோசிச்சு வெற்றிகரமாக செயல்பட்டு கொண்டிருக்கும் இரு விவசாயிகளின் கதையே இது. அவரவர் கஷ்டம் அவரவர்களுக்கு கொஞ்சம் சிந்தனை பண்ணி பாருங்கள், பத்து ஏக்கர் கரும்போ, பருத்தியா உள்ள நிலத்திற்கு மருந்து அடிக்க வேண்டும். அந்த மருந்து அடிப்பவரின் நிலையை மனதில் கொண்டு வாருங்கள். காலையில் இருந்து மாலை வரை பத்து லிட்டர் கேனை முதுகில் சுமந்து கொண்டு இங்கும் அங்குமாய் நடந்து, காற்று எதிர் திசையில் அடித்தால் மருந்து முகத்தில் விழும் போது குற்றால சாரல் துளி முகத்தில் விழுந்தது போலவா இருக்கும்?. இப்படிக் கஷ்டப்படுத்தும் ஒரு வேலைக்கு எளிதாக ஒரு தீர்வு கிடைச்சா எப்படி இருக்கும், என யோசனைச் செய்யாமலா இருப்பார்கள் நம் மக்கள். அதுவும் அந்த யோசனை அவர்களிடம் உள்ள பொருள்களை வைத்தே முடிக்க முடியும் என அறியும் பொழுது அது இன்னும் மிக எளிதாக அமையும்.

**இரு சக்கர வாகனம் தெளிப்பானாக மாறிய கதை:**

விழுப்புரம் மாவட்டத்தில் வள்ளிப்பட்டு எனும் கிராமத்தில் திரு. அங்கப்பன் எனும் விவசாய கூலி தொழிலாளி, வயல் வயலாக சென்று மருந்து மருந்து அடிக்கும் வேலையைச் செய்து வருகிறார். எப்பொழுதும் போல உள்ள மருந்து தெளிப்பானை உபயோகப்படுத்தினால் வரும் தொல்லைகளில் இருந்து விடுபடுவதற்காக, தன்னிடம் இருந்த “Bajaj M 80” எனும் இரு சக்கர வாகனத்தைத் தெளிப்பானாக மாற்றி வடிவமைத்துள்ளார்.



வடிவமைப்பு : இரு சக்கர வாகனத்தின் பின்னால் மருந்துக் கலனை வைத்து, அதை வண்டியின் மோட்டாரோடு இணைத்துக் கொண்டு, 100 மீ நீளமுள்ள குழாயையும் மருந்துக் கலனோடு இணைத்துக் கொண்டார். வண்டியை இயக்கும் பொழுது அந்த மோட்டார் உதவியுடன் தெளிப்பான் செயல்பட ஆரம்பிக்கிறது. 100 மீ நீளமுள்ள குழாயை இணைத்திருப்பதால், வண்டியை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு வயலின் எந்த மூலைக்கும் கூட எளிமையாக இவரால் சென்று மருந்து அடிக்க முடிகிறது. ஒரு வயலில் வேலை முடிந்தால், குழாயை மடித்து வைத்துவிட்டு, அடுத்த வயலை நோக்கி “Bajaj M 80” வாகனம் செல்கிறது. இதை பார்க்கும் பொழுது நமக்கு “இறக்கை கட்டி பறக்குதையா அங்கப்பனின் பைக்கு” என்று பாடத் தோன்றுகிறது.

**வரவு– செலவு கணக்கு :** இரு சக்கர வண்டி மிகவும் பழைய வண்டி என்பதால் அதன் விலையோ ரூ. 2000 அல்லது ரூ. 4000 தான் ஆகிறது என்கிறார். குழாய் மற்றும் தெளிப்பான் விலை ரூ. 6000 எனக் கொண்டால், வடிவமைப்பு செலவு ரூ. 3000 என கொண்டால் அதிகபட்ச தோராயமான செலவு ரூ. 13000 ஆகிறது என்கிறார். ஒரு நாளைக்கு ஐந்து ஏக்கர் மருந்து அடிப்பதாக கணக்கில் கொண்டால், ஓர் ஏக்கருக்கு இவர் வசூலிக்கும் தொகை ரூ. 250 ஆக எடுத்துக் கொண்டால், ஒரு நாளைக்கு இவரின் வருமானம் ரூ. 1250. மற்ற செலவுகளான பெட்ரோல், கூலி ஆகியவை ரூ. 500 என கொண்டால், நிகர வருமானம் ரூ. 750 என தன் கணக்கையும் நம்முடன் பகிர்ந்து கொள்கிறார். வருமானம் ஒரு புறம் இருந்தாலும். மருந்து அடிக்கும் கஷ்டம் தெரியாது.

## டிராக்டர் ஒன்று தெளிப்பானாக மாறிய கதை





புதுகோட்டை மாவட்டம் சரக்காடு கிராமத்தில் உள்ள திரு. செந்தில்குமார் டிராக்டரையே தெளிப்பானாக மாற்றி உள்ளார். வடிவமைப்பு : இவர் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரு கலன்களை டிராக்டரில் வைத்து, 600 அடி நீளமுள்ள குழாயை இணைத்து, 1 ஹெச்.பி மோட்டாரையும் இணைத்துள்ளார். டிராக்டரை இயக்கும் பொழுது, இந்த மோட்டாரும் இயக்கப்பட்டு தெளிப்பான் தயாராகிறது. குழாய் 600 அடி நீளம் என்பதால் எவ்வளவு பெரிய அளவிலான வயல்களுக்குக் கூட மருந்து அடிப்பது மிகவும் சுலபமாகிறது. டிராக்டர் தெளிப்பானை பொருத்தமட்டில் உள்ள ஒரே ஒரு சவால் என இவர் குறிப்பிட்டது, ஒரு நாளைக்கு 20 முதல் 30 ஏக்கர் நிலத்துக்கு இவர் மருந்து தெளிப்பை மேற்கொண்டால் மட்டுமே இலாபம் அதிகமாக கிடைக்கும். விவசாயப் பருவகாலங்களில் 30 முதல் 40 ஏக்கர்கள் வரையிலும் தெளிப்பு செய்ய முடிகிறது. விவசாய பருவம் இல்லாத நேரங்களில் வேலை அதிகமாக இருப்பதில்லை, இன்னும் அருகிலுள்ள மற்ற ஊர்களுக்கும் தொடர்பு கொண்டால் இந்தத் தொழில் எனக்கு மட்டுமல்ல விவசாயத்தில் வேலையாள்கள் கிடைக்காமல் கஷ்டப்படும் எல்லா விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் எனத் தன்னுடைய சமூக அக்கறையையும் நம்முடன் பகிர்ந்து கொண்டார்.

அங்கப்பன்
த/பெ. சக்கரவர்த்தி
பிள்ளையார்கோவில்தெரு, வாழப்பட்டு
விழுப்புரமாவட்டம் – 605402, செல் : 9994481840
செந்தில் குமார்
சூரக்காடு, முள்ளக்குறிச்சி அஞ்சல்
கரமகுடி தாலுகா, புதுக்கோட்டை
செல் :7639749449

நன்றி : கால்நடை வேளாண்மை, ஏப்ரல் –2020.

## ஊரடங்கு சமயம் கைகொடுக்கும் மாடித்தோட்டம்



தற்சமயம் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவினால் வீட்டிலேயே மக்கள் முடங்கி கிடக்கின்றனர். வெளியே சென்று வீட்டிற்கு தேவையான அத்தியாவசிய சாமான்கள், காய்கறிகள் வாங்குவதுகூட கஷ்டமாக உள்ளது. சென்னையில் ஆழ்வார்திருநகரியில் வசிக்கும் சுபஸ்ரீ மாடி காய்கறி தோட்டத்திலிருந்து குடும்பத்திற்கு தேவையான காய்கறிகளை எடுத்து கொள்வது ஒரு நல்ல உத்தியாகும். தினமும் 1/2 கிலோ அளவிற்கு காய்கறிகளை பறித்துக் கொள்ள முடிகிறது. துவையலுக்கு தேவையான புதினா, கறிவேப்பிலை, பிரண்டை போன்றவையும் கிடைக்கிறது. இது இயற்கை முறையிலே விளைந்தது. இரசாயன உரம், மருந்து இல்லாமலேயே விளைவிக்கப்பட்டது. இவரது தோட்டத்தில் வெண்டை (3 இரகம்), கத்திரிக்காய் (5 இரகம்), கீரை (20 இரகம்), மிளகாய் (9 இரகம்), மஞ்சள் (3 இரகம்), வெற்றிலை (3 இரகம்), கோவைக்காய், புடலங்காய், பேஷன் பழம் (Passion fruit), எலுமிச்சை, தக்காளி, மிளகு, திப்பிலி, இஞ்சி போன்ற பல தாவரங்கள் பயிரிடப்படுகின்றன. முக்கியமான மூலிகை தாவரங்களான எலும்பொட்டி இலை, அமுக்கிராங் கிழங்கு, ஆடாதொடை, சீந்தில், சித்தரத்தை போன்றனவும் பயிரிடப்படுகின்றன. வீட்டில் இருக்கும் சமயம் வீட்டில் உள்ள அனைவரும் மாடி தோட்டத்தில் உழைத்து வீட்டிற்கு தேவையான காய்கறிகளை பெற்றுக் கொள்ளலாம்.



பேஷன் பழச்சாற்றில் உப்பு சேர்த்து அருந்தி வந்தால் மலேரியா காய்ச்சல், டைப்பாய்டு காய்ச்சல் குணமாகும். கொழுக்கட்டை செய்யும் சமயம் வாழையிலைக்கு பதில் மஞ்சள் இலையை பயன்படுத்தினால் நல்ல வாசனையும் கிடைக்கும். இவரிடத்தில் பசு மஞ்சள், கரு மஞ்சள், கஸ்தூரி மஞ்சள் மூன்று இரகங்கள் உள்ளன. கரு மஞ்சளை புற்று நோயுள்ளவர்களுக்கு கொடுத்து வருகிறார். சித்தரத்தை கசாயம் அருந்துவதால் காய்ச்சல் குணமாகும். இவருடைய தோட்டத்தில் திராட்சை கொடியும் உள்ளதால் பறவைகள் இவருடைய வீட்டிற்கு வந்த வண்ணமாக உள்ளன.

திருமதி. சுபஸ்ரீ
அத்ரி ஹெல்த் புரோடெக்ஸ்
பிளாட் எண் – 7, திலகர் தெரு, ஏ.ஜீ.எஸ் காலனி, ஆழ்வார்திருநகர், சென்னை –27, செல் – 9677101627

## மரவள்ளி கிழங்கு

இன்று மரவள்ளி கிழங்கு என்பது அரிதாகி விட்டது. அதோடு குச்சி வள்ளி கிழங்கு தான் அதிகமாக இருக்கிறது. படத்தில் பார்ப்பது நம் பாரம்பரியமான ரகத்தை சார்ந்த மரவள்ளி மரம். இதை இப்பொழுது உள்ளவர்கள் பார்த்திருக்க வாய்ப்பு இருக்காது. இது இரண்டு வருடமாக எங்கள் பண்ணையில் இங்கு இருக்கிறது. வருடத்திற்கு இரண்டு முறை பூ பூத்து காய் வைக்கிறது. மரத்தை நம் தேவையின்போது

வெட்டிவிட்டு கிழங்கை எடுக்கலாம். நல்ல போதிப்பான மண்களில் வளர விட்டால் பெரிய அளவில் கிழங்கை எடுக்கலாம். சாதாரணமாக கிழங்கை சாப்பிட்டு இருக்கலாம்.




இது உணவு பஞ்சத்தின் போதுதான் அதிகம் கவனம் பெற்றது. கிழங்கு மற்றும் வேரில் பசியை தூண்டும் குணமும், பேதி மற்றும் புண்களை ஆற்றக்கூடிய மருந்தும், ஊக்கத்தை தரும் டானிக்கும் உள்ளது. இது மலச்சிக்கல், காயம், முற்றிய அல்சர், சுவையின்மை மற்றும், நரம்பு தளர்ச்சிக்கு மருந்தாக பயன்படுகிறது. இது போன்ற நூற்றுக்கணக்கான அரிய மூலிகைகள் பற்றி அறிந்திட... நேரில் காண... வாருங்கள். வரவேற்கிறோம். பள்ளி, கல்லூரி மாணவர்கள், தாவரவியல், மூலிகை ஆராய்ச்சியாளர்கள், மற்றும் மருத்துவர்கள் நேரில் கண்டு பயன்பெறலாம்.

மோகனகிருஷ்ணன்
டி. களத்தூர் கிராமம், துறையூர் வழி
பெரம்பலூர் மாவட்டம்
செல் – 7448397805, 9894401680

## விவசாயிகள் உருவாக்கிய பயிர்ரகங்கள்

இந்தியாவில் பல மாநிலங்களில் புதிய பயிர்ரகங்களை சில விவசாயிகள் உருவாக்கி உள்ளனர். இதற்கு தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை பரிசும், சன்மானமும் கொடுத்து ஊக்குவித்துள்ளது. இந்த பயிர் ரகங்களில் சிலவற்றை தமிழகத்தில் பரவலாக்க உள்ளோம். இதில் கலந்து கொள்பவர்கள் விதைகளை பெற்று கொண்டு இதன் விளைச்சல் எங்ஙனம் உள்ளது என்பதை எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். எங்களிடம் குறைந்தளவு விதை உள்ளது. தேவைப்படுவோர் எங்கள் சேவா நிறுவனத்தை அணுகலாம்.

நெல் ரகம் : D.R.K நெல் ரகம்
அதிக விளைச்சல் ஏக்கருக்கு 25–30 குவிண்டால்;
கதிர்களின் எண்ணிக்கை : 6–10;
நடுத்தர உயரம் : 130 செ.மீ
நீளமான கதிர் : 22 செ.மீ
வயது :140 நாட்கள்
சமையலுக்கு நல்ல ருசி உண்டு.
நோய், வறட்சி தாங்கும்.
கண்டுபிடிப்பாளர் பெயர் : தாதாஜி இராமஜி
மாநிலம் : மஹாராஷ்ட்ரா

நெல் ரகம் : குடாரட் 5. இது நல்ல மணம் உள்ள ரகம்.
விளைச்சல் : ஏக்கருக்கு 25 – 30 குவிண்டால்
வயது : 120 –123 நாட்கள்
உயரம் : 75 – 80 செ.மீ.
சிம்புகள் : 30–35
விதை : சன்னரகம்
இது குலை நோய்க்கு தாக்கு பிடிக்கும்.
கண்டுபிடிப்பாளர் பெயர் : பிரகாஷ்சிங் இரகுவன்சி, காசி, உத்திரபிரதேசம்

கத்தரிக்காய் : நிரஞ்சன் கத்தரிரகம்
தண்டிலும் காம்பிலும் முள் இருக்கும். அதிக அளவில் காய்க்கும் (செடிக்கு 30 காய்). நீளமான காய் (45–60 செ.மீ). பச்சை நிற வரிகள் காணப்படும். ருசி நன்றாக இருக்கும். முக்கிய பூச்சி நோய்களுக்கு தாக்கு பிடிக்கும்.
கண்டுபிடிப்பாளர் பெயர் : லீலா இராம்சகு, சதீஸ்கர்

மரத்துவரை : ரிச்சா 2000
வருடத்திற்கு 2 முறை காய்க்கும்.
விளைச்சல் : ஏக்கருக்கு 2 குவிண்டால். இது நோய் எதிர்ப்பு சக்தி கொண்டதாகும்.

விதை அளவு : ஏக்கருக்கு 3–4 கிலோ

கண்டுபிடிப்பாளர் பெயர் : ராஜ்குமார்ரத்தூர், மத்தியபிரதேசம்

அவரை : JK-1 ரகம் 60–65 நாட்களில் காய்க்கும். நல்ல விளைச்சல். நல்ல ருசி கிடைக்கும்.

கண்டுபிடிப்பாளர் பெயர் : ஜித்தாபாய் கோதர்பாய் படேல், குஜராத்

நிலக்கடலை ரகம் : மொர்லோ

விளைச்சல் : ஏக்கருக்கு 12–14 குவிண்டால். குறைந்தளவு நீர்பாசனம் போதுமானது. 2 கொட்டை கொண்டது. இரும்பு சத்து குறைவான மண்ணிலும் சாகுபடி செய்யலாம். நல்ல ருசி உள்ளது.

உளுந்து ரகம் : பைரவ் – 1

இது விரைவில் அறுவடைக்கு வரும். கருப்பு நிற விதை. நல்ல விலை கிடைக்கும். பூச்சி நோய்களுக்கு தாக்கு பிடிக்கும். ஊடு பயிராக போடுவது சிறந்தது.

கண்டுபிடிப்பாளர் பெயர் : ரஜினிபாய்பட்டேல், குஜராத்

விதைகள் தேவைப்படுவோர் எங்களிடம் தொடர்பு கொள்ளலாம்.

சேவா

45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து, மதுரை–625016

தொலைபேசி: 0452–2380082

## பாரம்பரிய நெல் விதைகள்

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம், பாரம்பரிய விதைகள் மையத்தின், வழியில் பயணிக்கும் தற்சார்பு இயற்கை விவசாயிகள் பயிர் செய்த பாரம்பரிய நெல் விதைகளை பரவலாக்கும் முதல் திட்டமாக பாரம்பரிய விதை நெல் நமது மாவட்ட விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்க முன்வந்துள்ள விவசாயிகளின் தொலைபேசி எண்ணுடன் பட்டியலை கலசப்பாக்கம் பாரம்பரிய விதைகள் மையம் தயாரித்து வெளியிட்டு உள்ளது.

எல்லா இரக விதைகளும் கிலோ ரூ. 60க்கு கிடைக்கும்.

**வாடன் சம்பா:** கலசபாக்கம்,ராஜேந்திரன்,9500435680 (கையறு வடை), வாழியூர், பேரரசு, 9444333092, விலவாரணி, விஜய, 9042565704.

**தூயமல்லி**: பில்லூர், ராம்குமார், 6383621402, திருவண்ணாமலை, சீனிவாசன், 9952619474.

**தங்கசம்பா:** கேளூர், நந்தகுமார், 8072314815,

**சீரகசம்பா:** மாம்பட்டு, தெய்வமணி, 8695337574, சோர்பணந்தல், சந்திரசேகர், 9597874076, விளாங்குப்பம், சுரேஷ், 9626441946, வாழியூர், பேரரசு, 9444333092, தேசூர், பாலா,9344133815,(கையறு வடை) .

**களர்பாலை:** சோர்பணந்தல், சந்திரசேகர், 9597874076,

**கிச்சிலி சம்பா:** மாம்பட்டு, தெய்வமணி, 8695337574,

**ஆத்தூர் கிச்சிலி சம்பா:** பில்லூர், ராம்குமார், 6383621402, திருவண்ணாமலை, சீனிவாசன், 9952619474.

**ஒட்டுகிச்சிலி சம்பா:** வாழியூர், பேரரசு, 9444333092, கேளூர், நந்தகுமார், 8072314815,

**மிளகு சம்பா:** வாழியூர், பேரரசு, 9444333092,

**பொம்மி:** கேளூர், மனோகரன், 7418004415

**நெய்கிச்சிலி சம்பா :** மெய்யூர், பாஸ்கரன், 9626157771

**இலுப்பப்பூ சம்பா:** அத்திமூர் வேடியப்பன், 8608291279

**கொத்தமல்லி சம்பா:** வடமதியமங்கலம், மணி, 9791414470

**மாப்பிள்ளைசம்பா:** தேசூர், பாலா,9344133815,(கையறு வடை), செஞ்சி, அருண்பாண்டியன், 9626788655

**காலாநமக்:** லாடவரம், கார்த்திக், 9943484894

**காட்டுயாணம்:** சோர்பணந்தல், சந்திரசேகர், 9597874076, போளூர், லெனின், 9944144106, வில்லாரணி, அய்யாகுட்டி, 9042565704

**கருடன்சம்பா:** அந்திமூர், அருண்குமார், 7092900876

**பூங்கார்:** பாக்கியபேட்டை, மணிகண்டன், 9790762510, ஆரணி, லோகேஸ்வரன், 9994916407, கேளூர், நந்தகுமார், 8072314815, திருவண்ணாமலை, சீனிவாசன், 9952619474.

**குள்ளங்கார்:** பில்லூர், ராம்குமார், 6383621402, பாக்கியபேட்டை, மணிகண்டன், 9790762510, தேசூர், பாலா,9344133815 வேடந்தவாடி, சக்திவேல், 9994540548, திருவண்ணாமலை, சீனிவாசன், 9952619474.

**அறுபதாங்குறுவை :** அண்டம்பள்ளம், கோகுலகண்ணன், 9003388753, கேளூர், நந்தகுமார், 8072314815, மாம்பட்டு, தெய்வமணி, 8695337574, ஆரணி, லோகேஷ்வரன், 9994916407

**கருங்குறுவை:** லாடவரம், கார்த்திக், 9943484894, வாழியூர், பேரரசு, 9444333092, சோர்பணந்தல், சந்திரசேகர், 9597874076,கீழநெல்லி, அருண், 9629918540, அந்திமூர், அருண்குமார், 7092900876

**கருப்புகவுணி:** கேளூர், இளங்கோ, 8072148957,

அந்திமூர், அருண்குமார், 7092900876, விளாங்குப்பம், சுரேஷ், 9626441946.

**நவரா :** போளூர், ராஜா, 9894177848, கேளூர், இளங்கோ, 8072148957,

**(சொர்ணமல்லி, ஜாஸ்மின், இராணிகத்தா):** அந்திமூர், அருண்குமார், 7092900876,

**சொர்ணமசூரி:** பில்லூர், ராம்குமார், 6383621402, பாக்கியபேட்டை, மணிகண்டன், 9790762510, வாழியூர், பேரரசு, 9444333092, அண்டம்பள்ளம், கோகுலகண்ணன், 9003388753, அந்திமூர், அருண்குமார், 7092900876, விளாங்குப்பம், சுரேஷ், 9626441946.

**வெள்ளைபொன்னி:**தேசூர், பாலா,9344133815, (கையறு வடை), ஆரணி, லோகேஷ்வரன், 9994916407, செஞ்சி, அருண்பாண்டியன், 9626788655

**பாஸ்மதி:** கேளூர், மனோகரன், 7418004415, அந்திமூர், அருண்குமார், 7092900876, விளாங்குப்பம், சுரேஷ், 9626441946.

**சேலம் சன்னா:** விளாங்குப்பம், சுரேஷ், 9626441946, போளூர், இந்திரா, 9486209030.

போன்ற நெல் விதைகள் இங்கு கிடைக்கின்றன.

## விவசாயம் செய்து கோடீஸ்வரர் ஆனவர்



விவசாயம் செய்து கோடீஸ்வரர் ஆன ஆந்திரா விவசாயி குடிவாடா நாகரத்தினம் நாயுடு.

ஆந்திர அரசு இவரைப் பற்றிய பாடத்தை ஒன்பதாம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கு சேர்த்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதியே இவருடைய பண்ணைக்கு வருகை தந்துள்ளார். நான் ஹைதராபாத்தில் இறங்கிய போது அவர் அங்கு இல்லை. டெல்லியில் இருந்தார். தேசிய அளவில் நடைபெறும் சாதனை விவசாயிகள் மாநாட்டின் சிறப்பு விருந்தினராக அவருக்கு அன்று பாராட்டும் 10 லட்சம் பணமும் ரொக்கமாக அளிக்கப்படுகிறது. அந்த நிகழ்ச்சிக்காக அவர் அங்கு போயிருக்கிறார். திரும்பி வர இரண்டு நாட்கள் ஆகும் என்றார்கள். இரண்டு நாட்களாக ஹைதராபாத்தை சுற்றி திரிந்தேன். மூன்றாவது நாளில் அவர் வீட்டில் போய் நின்றேன். வசதியான வீடு செழிப்பான பணத்தில் கட்டியது என்பதை வீட்டின் தோற்றமே காட்டியது. காலிங் பெல்லை அழுத்தி காத்திருந்தேன். நான் யாருக்காக இத்தனை கி.மீ. பயணித்து வந்தேனோ அவர்தான் கதவை திறந்தார். இந்த பெயர்தான் மதுரையிலிருந்து ஹைதராபாத் வரை என்னை அழைத்துக் கொண்டு போனது. தில்சுக் நகரில் உள்ள கௌதம் நகர் காலனியில் அவர் வீடு இருந்தது. வீடு முழுவதும் விருதுகள் அலங்கரித்து நின்றன. 336 விருதுகள், 9 சர்வதேச விருதுகள் என்று வீடு கொள்ளா பெருமைக்கு சொந்தக்காரர் அவர். தென்னாப்பிரிக்காவில் கொடுத்த விருது என்னை வரவேற்ற அவர் முதலில் அவரது வீடு முழுவதையும் சுற்றிக் காண்பித்தார். பாத்ரூம் பிட்டிங்க்ஸ் கூட எங்கிருந்து வரவழைத்தது என்று சொன்னார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. எதற்கு இதையெல்லாம் செய்கிறார் என்று தெரியவில்லை. வீட்ட முழுசா பாத்துட்டீங்களா... எப்படி இருக்கு?

ஒரு டாக்டரோட வீடு மாதிரி செழிப்பாக இருக்கு....

அதுக்காகத்தான், வீட்ட சுத்தி காண்பிச்சேன். ஒரு விவசாயி, டாக்டர் மாதிரியோ என்ஜினியர் மாதிரியோ ஏன் வாழ முடியாது? அவர்களும் வசதியாக வாழ முடியும் என்பது தான் எனது கனவு. இதை மற்ற விவசாயிகளுக்கும் புரிய வேண்டும் என்பதற்காகத்தான் உங்களுக்கு வீடு முழுவதும் சுத்திக் காண்பிச்சேன். இந்த வீடு கூட என்ஜினியர் உதவியில்லாமல் நானே டிசைன் செய்து வடிவமைத்து கட்டியது தான் என்று அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக கொடுத்தார். அவர் சொன்ன மாதிரியே எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் குடி இருக்கும் கௌதம் காலனி கூட வசதியானவர்கள் வாழும் இடம் தான். மேற்கொண்டு அவர் பேசியதிலிருந்து.... நான் பிறந்தது வளர்ந்தது எல்லாமே ஆந்திராவில் உள்ள சித்தூர் மாவட்டம் பாலகிருஷ்ணபுரத்தில்தான். எனது தாய்தந்தையரும் விவசாயிகள்தான். பள்ளிப்படிப்பை

எனது சொந்த ஊரில் முடித்து விட்டு கல்லூரி படிப்பிற்காக சென்னை ரயிலேறினேன். அங்கு டிப்ளமோ இன் எலெக்ட்ரிகல் இன்ஜினீயரிங் படித்து முடித்தேன். அதன் பின் அண்ணா சாலையில் உள்ள ஒரு நிறுவனத்தில் இரண்டு வருடம் வேலை பார்த்தேன். நல்ல வேலை, நல்ல சம்பளம் ஆனாலும் என் மனம் நிலை கொள்ளவில்லை. என் நாட்டமெல்லாம் விவசாயமாகவே இருந்தது. மனைவி மகளுடன் நாகரத்தினம் விவசாயத்தில் ஏதாவது புதுமையாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் என்னை தூங்க விடாமல் செய்தது. இரண்டு வருடங்களில் வேலையை விட்டு விட்டு ஹைதராபாத் வந்தேன். அதற்குள் திருமணமும் முடிந்தது. கையில் சேமித்து வைத்திருந்த பணத்திற்கு ரெங்காரெட்டி மாவட்டத்தில் தரமதி பேட்டை என்ற இடத்தில் 17 ஏக்கர் நிலத்தை வாங்கினேன். கரடுமுரடான பாறைகள் நிறைந்த அந்த இடம் விவசாயத்திற்கு ஏற்றதல்ல என்று ஒதுக்கி வைத்திருந்தார்கள். துணிந்து வாங்கினேன். என்னிடம் இருந்த பணத்திற்கு அப்படிப்பட்ட நிலம் தான் கிடைத்தது. முழுவதும் தரிசாக கிடந்த அந்த நிலத்தை வளமாக்கி விளைவிக்க போராடினோம்.

நாகரத்தினத்தின் பசுமையான வயல் நான் எனது மனைவி சத்யவதி, எனது தாயார் மூவரும் இரவு பகலாக கடினமாக உழைத்து தரிசு நிலத்தை தங்கம் விளையும் பூமியாக மாற்றினோம். இப்போது எனது நிலத்தில் ஊட்டி, கொடைக்கானலில் வளரும் பூச்செடிகளையும், காபி செடிகளையும் கூட வளர்க்க முடிகிறது. அந்தளவிற்கு வளமிக்க மண்ணாக நிலம் மாறியுள்ளது. விவசாயி என்பவன் எதையும் வெளியில் காசு கொடுத்து வாங்கக் கூடாது என்பது தான் எனது எண்ணம். அவனுக்கு வேண்டிய உணவை அவனே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். நான் விவசாயத்திலே சம்பாதித்து, அதிலே சாப்பிட்டு, அதிலே வருமானமும் பார்க்கிறேன். நான் ஒரே வகையான பயிர்களை நிலம் முழுவதும் வளர்ப்பதில்லை. கலப்பு பண்ணை முறையில் இயற்கை வேளாண்மை செய்து வருகிறேன்.

திருந்திய நெல் சாகுபடி முறையில் நெற்பயிர்கள் 2003ம் ஆண்டு இந்தியாவில் திருந்திய நெல் சாகுபடி முறையை முதன் முதலாக பயன்படுத்தி ஒரு ஷெக்டேருக்கு 15.4 டன் நெல்லை உற்பத்தி செய்து சாதனைப் படைத்தேன். இது நாள் வரை இது தான் அதிக விளைச்சலுக்கான சாதனையாக உள்ளது. என்னை பின்பற்றி அடுத்த ஆண்டு ஆந்திராவில் உள்ள 10500 விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில், பயிரிட்டார்கள். இதற்காக பல இடங்களுக்கு சென்று பேசினேன். வெளிநாடுகளில் இருந்தும் என்னை அழைத்தார்கள். இந்த நிலையில் தான் ஆந்திராவின் முன்னாள் முதல்வர் மறைந்த ஒய்.எஸ். ராஜசேகர் ரெட்டி எனக்கொரு பாராட்டு விழாவை ஏற்பாடு செய்தார். அதற்காக எனது நிலத்துக்கு அருகில் தற்காலிக ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைத்து எனது பண்ணையில் ஒரு நாள் முழுவதும் இருந்தார். ஒரு சாதாரண விவசாயியை தேடி மாநில முதல்வர் வந்தது அது தான் முதல் முறை.

அந்த நிகழ்ச்சிக்கு பி.பி.சி. சி.என்.என் தொலைக்காட்சி முதற்கொண்டு இந்தியாவின் முன்னணி பத்திரிகையாளர்கள் வந்திருந்தனர். அவர்கள் முன்னிலையில் ஒரு மாதத்திற்கு நீங்கள் எவ்வளவு சம்பாதித்தீர்கள் ? என்று கேட்டார். இதன் மூலம் தனது ஆட்சியில் விவசாயிகள் மிக நன்றாக இருப்பதாக பத்திரிகையாளர்கள் மூலம் நாட்டு மக்களுக்கு சொல்ல வேண்டும் என்பது தான் அவர் எண்ணம். நான் வருமானத்தை சொல்லவில்லை. மாநிலத்திலே மிக அதிகமாக சம்பளம் வாங்கும் அரசு அதிகாரியை விட நான் அதிகமாக சம்பாதிக்கிறேன். நிம்மதியாக இருக்கிறேன் என்றேன்.

அதற்கடுத்த ஆண்டு 2006ல் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் இந்தியா வந்தார். அவர் தனது நிகழ்ச்சியில் என்னை சந்திப்பதையும், ஒரு நிகழ்ச்சியாக வைத்திருந்தார். எனது விவசாய முறையை அறிந்த அவர், ஒரு விவசாயி ஒரு விஞ்ஞானியை விட மேன்மையானவர் என்றார். என்னை அமெரிக்கா வரும்படி அழைத்தார். எனது சேவை எனது தாய் நாட்டுக்கே என்ற கொள்கையில் உறுதியாக இருந்த நான் அந்த வாய்ப்பை மறுத்து விட்டேன்.

இந்த அலங்கார மலர் ஒன்றின் விலை ரூ. 250 நான் பிழைக்க முடியாமல், பிழைக்கத் தெரியாமல் விவசாயத்திற்கு வரவில்லை. மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே விவசாயத்திற்கு வந்தேன். இந்த 17 ஏக்கர் நிலத்தை

ரூ. 3.4 லட்சத்திற்கு வாங்கிய போது என்னிடம் வேறு எந்த பணமும் இல்லை. இன்றைக்கு எனது சொத்தின் மதிப்பு 17 கோடி ரூபாய். விவசாயம் மூலமே இந்த வருமானம் வந்தது என்னால் முடியும் போது மற்ற விவசாயிகளாலும் முடியும். என் சொத்து மதிப்பை பகிரங்கமாக வெளியிடுவதற்கு காரணமே, விவசாயம் நஷ்டம் தரும் தொழில் என்று விவசாயிகளே நினைக்கிறார்கள். திட்டமிட்டு பயிரிடுங்கள் பூமித்தாயைப் போல் அள்ளிக் கொடுப்பவள் யாரும் இல்லை. அதற்கு நானே உதாரணம்.

இயற்கை ஒத்துழைத்தால் உணவு உற்பத்தி செய்வது வெகு சுலபம். பெரும்பாலான விவசாயிகள் விளைவிப்பதோடு தங்களின் கடமை முடிந்ததாக நினைக்கிறார்கள். இங்கு சந்தைப்படுத்துவதுதான் கடினம். அதை சரியாக செய்தாலே போதும். விவசாயம் பணம் கொட்டும் ஒரு தொழிலே தான்.

வாட்டி எடுக்கும் வெயிலில் கூட காப்பி செடி வளர்கிறது. எனது நிலத்தில் இது வரை செயற்கை உரங்கள். பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்தியது இல்லை. அதனால் மண் வளம் மிக நன்றாக இருக்கிறது. எந்த வகை செடியையும் என்னால் இதில் வளர்க்க முடியும். விளை பொருட்களை நேரடியாக மக்களிடம் விற்கிறேன்.

வசதியானவர்கள் திருமணத்தில் தோரணமாக தொங்கவிடப்படும் அலங்கார மலர் எனது பொருட்களின் உற்பத்தியை விட தேவை அதிகம் இருக்கிறது. அதனால் 20 கிலோ அரிசி கேட்பவர்களுக்கு 10 கிலோ தான் கொடுப்பேன். இயற்கையான முறையில் விளைவித்த பொருள் என்றால் மார்க்கெட்டில் விலை அதிகம். நான் அதிக விலைக்கும் விற்பதில்லை. ஒரு கிலோ அரிசி ரூ 45 என்றால், எனது விலை ரூ. 47 ஆகத்தான் இருக்கும். இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக விற்பனை செய்வதால் இதுவே எனக்கு நல்ல லாபம். ஆர்கானிக் முறையில் விளைந்த பொருள் சாதாரண விலைக்கே கிடைப்பதால் வாடிக்கையாளருக்கும் லாபம்.

பெரும்பாலான விவசாயிகள் ஒரே தடவையில் பணக்காரர் ஆக வேண்டும் என்று பயிரிடுகிறார்கள். ஒரே பயிர் பயிரிடக்கூடாது. விவசாயி பலவகை பயிர்கள் உற்பத்தி செய்ய வேண்டும். நான் 75 வகையான பயிர்களை உற்பத்தி செய்கிறேன். மாமரங்களில் மட்டும் 35 வகைகள் உள்ளன. பெரிய இடத்து திருமணங்களில் பயன்படுத்தப்படும். விலையுயர்ந்த அலங்கார மலர்களில் 40 வகையை இங்கு பயிரிட்டுள்ளேன். இந்த வகை மலர் ஒன்று

ரூ. 250 வரை விலைபோகும். முகூர்த்த காலங்களில் இதன் விற்பனை நல்ல லாபத்தை தரும். இதுபோக மலர்களை பொக்கே செய்து அனுப்புவேன். இது சீஸன் வருமானம். தேங்காயை அப்படியே விற்றால் லாபம் குறைவு. அதனால் தேங்காய் எண்ணெய் எடுத்து அதை விற்றால் லாபம் அதிகம். தேங்காய் நாரை உரமாக போட்டு விடுகிறேன். இதனால் இரட்டிப்பு லாபம். இது மாத வருமானம். எனது பண்ணையில் 12 பசுமாடுகள் வைத்துள்ளேன். எந்த மாட்டிற்கும் நோய் வந்து ஊசியோ மருந்தோ கொடுத்ததில்லை. இயற்கையாக அது எவ்வளவு பால் கொடுக்குமோ அதை மட்டும் நாம் எடுத்துக் கொண்டாலே போதும். மாடுகளில் மற்ற மருத்துவ செலவுகள் எதுவும் வராது. பால் மூலம் தினசரி வருமானம் வரும். பள்ளி மாணவர்களுக்கு பாடம் எடுக்கும் நாகரத்தினம் ஒரு விவசாயிக்கு தினசரி வருமானம், வார வருமானம், மாத வருமானம், 6 மாதத்திற்கு ஒரு முறை வருமானம், ஆண்டு வருமானம் என்று ஐந்து வகையான வருமானங்கள் உண்டு. அதை சரியாக திட்டமிட்டு செய்தாலே போதும். யாரிடமும் கையேந்த வேண்டியதில்லை. நான் வங்கிக் கடனாகவோ அரசாங்க மானியமாகவோ ஒரு பைசா கூட பெற்றதில்லை. இது சுயமரியாதை அதிகம் கொண்ட தொழில். விவசாயி பிச்சைக்காரனில்லை. ஒரு டாக்டர், என்ஜினீயரை விட விவசாயி என்று சொல்வதில் பெருமையடைகிறேன் என்று கூறி தனது தோட்டத்துக்கு என்னை அழைத்துப் போனார். அங்கு பள்ளி மாணவ மாணவிகள் இவருக்காக காத்திருந்தார்கள்.

உணவு உற்பத்தியாகும் இடத்தை பார்வையிடும் மாணவிகள், மாணவர்களுக்கு விவசாயம் சம்பந்தமான விழிப்புணர்வு தருவதை எனது கடமையாக வைத்துள்ளேன். இது வரை 35 ஆயிரம் மாணவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். நகரத்தில் வளர்ந்த இன்றைய தலைமுறையினரிடம் அரிசி எங்கிருந்து வருகிறது? என்று கேட்டால் சூப்பர் மார்க்கெட் என்று பதிலளிப்பார்கள். அவர்களுக்கு அரிசி உருவாகும் இடத்தையும், ஒரு விவசாயி

எத்தனை சிரமப்பட்டு அதை உருவாக்குகிறான் என்பதும் தெரிந்தால்தான் விவசாயத்தின் அருமை தெரியும். வருங்காலத்தில் அதை அழியவிடாமல் பாதுகாப்பார்கள் என்று கூறும் நாகரத்தினத்தை பற்றி ஒன்பதாம் வகுப்பு சமூக அறிவியல் புத்தகத்தில் ஒரு பாடமாக ஆந்திர அரசு வைத்துள்ளது.

தலைவர்களைப் பற்றி தான் பள்ளிக்கூட மாணவர்கள் படிப்பார்கள். ஆனால் விவசாயம் அதை விட முக்கியம் என்று உணர்ந்த அரசு இதைச் செய்திருக்கிறது. பாடப்புத்தகத்தில் இடம் பெற்றதாலே ஏராளமான மாணவர்கள் நாகரத்தினத்தை நேரில் வந்து சந்தித்து செல்கிறார்கள். வாழும்போதே மற்றவர்களுக்கு பாடமாக வழிகாட்டியாக அமையும் அதிர்ஷ்டம் சிலருக்கு மட்டுமே கிடைக்கும். அந்த அதிர்ஷ்டம் நாகரத்தினத்திற்கும் கிடைத்திருக்கிறது.

வைர வியாபாரியின் மகன் யுவேஷ் நாகரத்தினத்தைப் பற்றி தெரிந்த பலரும் அவரை விவசாயத்திற்கான மானசீக குருவாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள் அப்படி ஒருவர் தான் யுவேஷ் ஹரியானாவைச் சேர்ந்தவரான இவரது குடும்பத் தொழில் வைர வியாபாரம். இவர் நாகரத்தினத்தைத் தனது தந்தை என்றே சொல்கிறார். அவர் மூலம் விவசாயத்திற்கு ஈர்க்கப்பட்ட யுவேஷ் பகலில் விவசாய வேலைகளையும், மாலையில் தனது குடும்பத் தொழிலான வைர வியாபாரத்தையும் பார்த்து வருகிறார். இப்படி பலருக்கும் மாபெரும் உந்து சக்தியாக நாகரத்தினம் நாயுடு இருந்து வருகிறார் என்பது விவசாயத்துக்கே பெரிய விஷயம் தான்.

நாகரத்தினத்தின் மார்கெட் உத்தி மிகவும் வித்தியாசமானது. தனது தோட்டத்தில் விளையும் வெண்டைக்காய், கத்திரிக்காய், முருங்கைக்காய் முதலியவற்றை தினமும் பறித்து வந்து தனது வீட்டு வாசலில் வைத்து விடுகிறார். அதன் அருகே ஒரு பேப்பரில் காய்கறிகளின் விலையை எழுதி வைத்து, பக்கத்திலே ஒரு உண்டியலையும் வைத்து விடுகிறார். வேண்டியவர்கள் அவற்றை எடுத்துக் கொண்டு அதற்கான தொகையை உண்டியலில் போட்டு விடுகிறார்கள். இதற்காக ஆட்கள் யாரும் இருப்பதில்லை.

எல்லாமே இயற்கை முறையில் விளைவிப்பதால் 10 கி.மீ. தொலைவில் இருந்து கார் எடுத்து வந்து வாங்கிப்போகும் வாடிக்கையாளர்களும் இவருக்கு உண்டு. இவரது பண்ணையில் இருந்து வரும் பால் ஆர்கானிக் என்பதால் அதற்கும் வரவேற்பு மிக அதிகம்.

எல்லோர் மனதிலும் தோன்றும் கேள்வியே எனக்கும் தோன்றியது. உண்டியலில் விற்ற பொருளுக்கு சரியாக பணம் வந்து விடுகிறதா? என்று கேட்டேன். நாம் அவர்களை நேர்மையாளர்களாக நம்பினால் அவர்களும் அப்படியே நடந்து கொள்வார்கள். இங்கு நம்பிக்கைதான் முக்கியம் என்றார்.

இவரைத் தேடி ஒரு மாநில முதல்வர் வந்ததற்கும் அமெரிக்க ஜனாதிபதி வந்து அவர் நாட்டுக்கே அழைத்ததற்கும் காரணம் இப்போது தான் தெரிந்தது.

நாகரத்தினம் பெரிய கோடீஸ்வரர். அவர் நினைத்தால் பி.எம்.டபிள்யு. காரையே வீட்டு முன் நிறுத்தலாம். ஆனால் அவரிடம் ஒரு டூவீலர் கூட கிடையாது. எங்கு போவது என்றாலும் பொது வாகனத்தையே பயன்படுத்துகிறார். ஏனென்று கேட்டால், அவைகள் சுற்றுச் சூழலை பாழ்படுத்துகிறது. கூடுமான வரை நான் பூமி மாசுபடுவதை தள்ளிப் போடப் பார்க்கிறேன் என ஒரு தீர்க்கதரிசியாக கூறினார். ஒரு மாபெரும் மனிதரை சந்தித்த திருப்தியோடு அவரிடமிருந்து விடைபெற்றேன். மென்மேலும் சாதனை சிகரங்களை எட்ட நாமும் வாழ்த்துவோம். விவசாயம் குறித்த உங்கள் சந்தேகங்களுக்கு நாகரத்தினத்தை தொடர்பு கொள்ளலாம். தமிழிலேயே பதிலளிப்பார்.

குடிவாடா நாகரத்தினம் நாயுடு
ஹைதராபாத்
செல் : 9440424463
www.srinaidu.com நன்றி : வாட்ஸ்அப் செய்தி

**கால்நடைகளின் வெட்டு காயத்திற்கு**

மாடுகளுக்கு தீப்புண் காயம், வெட்டு காயத்திற்கு கல்யாணமுருங்கை தழை, வசம்பு, கட்டிகற்பூரம், வேப்பந்தழை, சேர்த்து அரைத்து தடவ வேண்டும். இதனை குணமாகும் வரை ஒரு வாரம் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். அல்லது அரளி மரத்தின் இலைகளை சாம்பலாக்கி வேப்பெண்ணெயில் குழைத்து புண்களின் மீது தடவ வேண்டும்.

கோவிந்தன்
அயோத்தியாபட்டிணம். சேலம் மாவட்டம்
செல்: 9364222098

## நெல் திருகும் திருகுக்கல் :



பழைய காலத்தில் நெல், தானியங்களை திருகுக்கல் மூலம் உடைத்து வந்தனர். பின்னர் அரிசி மில், மாவு அரைக்கும் இயந்திரம் வந்த பின் திருகுக்கல்லுக்கு மவுசு இல்லாமல் போய்விட்டது. செங்கல்பட்டில் திரு. முகுந்தன் திருகுக்கல்லை லெகுவாக இயக்க மேற்பகுதியை மாற்றி அமைத்துள்ளார்.



மரச்சக்கை கொடுத்து இரும்பு சீட்டில் கொத்து வைத்துள்ளார். இதன் மூலம் 2 பெண்கள் சேர்ந்தால் ஒரு மூடை எளிதாக நெல்லை அரைத்து அரிசியாக்கலாம்.

முகுந்தன், 92 இராஜாஜீ தெரு செங்கல்பட்டு
செல் : 8883727588

## நெல்லில் களை எடுக்கும் கருவி



இதன் மூலம் ஒரே நேரத்தில் 5 வரிசைகளில் களை எடுக்கலாம். 2 நிமிடத்தில் 150 அடி நீளம் களை எடுக்கலாம். ஒரு மணி நேரத்தில் ஒரு ஏக்கர் களை எடுக்கலாம். இதனை மாடு கொண்டு இயக்கலாம். இதனை தயார் செய்ய ரூ. 2000 செலவாகும்.



இதனை செங்கல்பட்டு முகுந்தன் உருவாக்கியுள்ளார்.

## அனைத்து பிரச்சனைகளுக்கும் சொல்லப்படும் மூலிகைத்தாவரங்கள்

எந்த உடல்ரீதியான பிரச்சனைகளுக்கும் முக்கியமான ஆதார மூலிகைகள் உள்ளன. இத்துடன் வேறு சில மூலிகைகளை நோய் அல்லது பிரச்சனைகளுக்கு ஏற்றாற்போல் சேர்த்துக் கொள்ள வேண்டும். அடிப்படை மூலிகைப் பொருட்கள்: வேப்பங் கொழுந்து, மஞ்சள், துளசியாகும். இந்த மூலிகைகளை அம்மியில் அரைத்து தான் தர வேண்டும். மதியம் 12 மணிக்குள் தர வேண்டும். இந்த மூலிகைத் தாவரத்தை அவ்வப்போது பறித்து பின் அரைத்து அன்றே பயன்படுத்த வேண்டும். இந்த மூலிகை தயாரிப்பை நானே செய்து பலருக்கு சர்க்கரைசத்து, தூக்கமின்மை, போன்ற பல நோய்களிலிருந்து குணமாயுள்ளது. இதற்கு நோயாளிகள் தரும் காணிக்கை பணத்தை வாங்கிக் கொள்கிறேன். இந்த மூலிகை தயாரிப்பு முறை, எங்ஙனம் தர வேண்டும் என்று எனக்கு கனவில் சொல்லப்படுகிறது.

திரு வெங்கட், 39/40, வெற்றி வேலன் நகர், பூச்சியூர் நரசிம்மநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர்–641031
செல் :7845574423, 9944284440

# ஆடுவளர்ப்பில் புதுமைகள் : மகளிர் குழு உறுப்பினர்களின் அனுபவங்கள்

## ராஜாத்தியின் ஆடு வளர்ப்பு



என் பெயர் இராஜாத்தி. நான் திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் வட்டம், செட்டிகுளம் பஞ்சாயத்திலுள்ள கிராமத்தை சேர்ந்தவர். லில்லி புஷ்பம் மகளிர் சுய உதவி குழுவில் உறுப்பினராக உள்ளேன். நான் கடந்த 10 ஆண்டுகளாக ஆடு வளர்த்து வருகிறேன். என்னிடம் 14 ஆடுகளும், 2 கிடாவும் உள்ளன. நான் செட்டிகுளம் கிராமத்தில் சேவா /ஐபாடு திட்டம் ஆடு வளர்ப்பு பயிற்சியில் செப்டம்பர் 2019ல் 2 நாட்கள் கலந்து கொண்டேன். பயிற்சியில் கூறப்பட்டபடி ஆடுகளுக்கு மாதம் தோறும் மசால் உருண்டையும், குடற்புழு நீக்க மருந்தும் கொடுத்து வருகிறேன். இதனால் ஆடுகளுக்கு வரும் கழிச்சல் நோய் மூலம் இறப்பு ஏற்படுவது குறைந்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 4 ஆடுகள் இறந்து விட்டன. தற்சமயம் இறப்பு இல்லை. ஆடுகளை தற்சமயம் எடை போட்டு விற்பதால் கூடுதல் இலாபம் கிடைக்கிறது. என்னுடைய கிடாவை எடை போட்டு கொடுக்கும் சமயம் ரூ. 8,000 க்கு விற்றேன். இது சாதராணமாக விற்பதை விட ரூ. 1000 அதிகம் கொடுத்தார்கள். தீபாவளி சமயம் ஆடுகள் விற்கின்றேன். வருடத்திற்கு சுமார் 30,000 வரை வருமானம் கிடைக்கிறது. கடந்த ஆண்டு தீபாவளிக்கு முதல் நாள் ஓர் ஆடு திருடு போய் விட்டது. இதை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி இராஜாத்தி
க/பெ. அய்யாசாமி
10/179, மெயின் ரோடு , மேற்கு தெரு
செட்டிகுளம் பஞ்சாயத்து , வள்ளியூர் வட்டம்
திருநெல்வேலி மாவட்டம், செல் : 7397120754

## வள்ளியம்மாளின் ஆடு வளர்ப்பு



நான் திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை வட்டம், கர்சத்து உவரி பஞ்சாயத்தில் மேலத்தெருவில் வசித்து வருகிறேன். அத்தீபூ மகளிர் சுய உதவி குழுவில் உறுப்பினராக உள்ளேன். என்னுடைய கணவர் இறந்து விட்டதால் நிலமில்லாத கூலி தொழிலாளியாக உள்ளேன். என்னிடம் தற்சமயம் 14 ஆடுகள், (8 பெட்டை ஆடு, 1 கிடா, 5 குட்டிகள்) உள்ளன. நித்தமும் ஆடுகளை நானே மேய்த்து வருகிறேன். சேவா/ ஐபாடு ஆடு வளர்ப்பு திட்டத்தில் அக்டோபர் 2019ல் 2 நாட்கள் ஆடு வளர்ப்பு பயிற்சியில் கலந்து கொண்டேன். ஆட்டிற்கு வரும் நோய் பராமரிப்பு, தீவனம் கொடுத்தல், எடை போட்டு விற்பனை செய்தல் போன்ற விவரங்களை அறிந்து கொண்டேன். எங்கள் பகுதியில் சமுதாய கால்நடை ஊக்குநர் திருமதி கௌரி மூலம் மாதம் தோறும் மசால் உருண்டை, குடற்புழு மருந்து கொடுக்கப்படுகிறது. இதனால் ஆடுகளுக்கு நோய் வந்து இறப்பு விகிதம் முற்றிலும் குறைந்துள்ளது. கடந்த மாதம் 2 கிடா விற்பனை செய்துள்ளேன். இந்த கிடாக்களை ரூ. 11,000, ரூ. 7800 க்கு எடை போட்டு விற்றேன். எடை அளவு முறையை 23 கிலோ, 17 கிலோ இருந்தன. திருமதி கௌரி எடை போட்டு கொடுத்தார்கள். இவ்வாறு எடை போட்டு கொடுத்ததால் ரூ. 3,000 கூடுதல் இலாபம் கிடைத்தது. இந்த இலாபத்தில் ரூ. 450 திருமதி கௌரிக்கு சேவை கட்டணமாக கொடுத்துள்ளேன்.

திருமதி வள்ளியம்மாள்
க/பெ. மகாலிங்கம்
93/2, மேலத்தெரு, கர்சத்து உவரி ,
திசையன்விளை வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்,
செல் : 9786511496

## தர்ஷினியின் ஆடு வளர்ப்பு



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், கீழவைப்பார் ஊராட்சியில் வசித்து வருகிறேன். நான் ஐபாடு திட்டத்தில் துவக்கப்பட்ட மகளிர் சுய உதவி குழுவில் உறுப்பினராக உள்ளேன். என் கணவர் இறந்து விட்டார். எனக்கு 3 மகன்கள் 1 மகள் உள்ளனர். நான் பள்ளியில் சத்துணவு பணியாளராக வேலை செய்து வருகிறேன். இது தவிர ஆடு மேய்த்து வருகிறேன். என்னிடம் 13 ஆடுகள் உள்ளன (6 பெட்டை ஆடுகள், 3 கிடா, 4 குட்டிகள்). நான் சேவா மூலம் கொடுக்கப்பட்ட ஆடு வளர்ப்பு பயிற்சியில் 2 நாட்கள் கலந்து கொண்டேன். இந்த பயிற்சி செப்டம்பர் மாதம் 2019ல் கொடுக்கப்பட்டது. பயிற்சிக்கு பின்னர் எனது ஆடு ஒன்று ஈன்ற சமயம் அதற்கு நஞ்சு கொடி விழாமல் இருந்தது. இதற்கு சமுதாய கால்நடை தன்னார்வலர் திருமதி சசிகலா எள்ளும் கருப்பட்டியும் கொடுத்ததும் சரியாகிவிட்டது. பின்பு ஒரு நாய் கிடாவை கடித்து விட்டது. அதற்கு எருக்களை, ஊமத்தை தழை, மஞ்சள், வேப்பிலை, சுண்ணாம்பு சேர்த்து அரைத்து கடிவாயில் பூசினோம். இதற்கு பின் ஆட்டிற்கு ஊசி மருந்து போட்டோம். இதனால் 3 நாட்களில் குணமாகிவிட்டது. ஓர் ஆட்டிற்கு தோலில் முடி கொட்டி இருந்தது. இதற்கு வேப்பெண்ணெய், சூடம் கலந்து பூசி விட்டோம் குணமாகிவிட்டது. என்னிடம் உள்ள ஆட்டை ரூ. 6500 க்கு விலைக்கு கேட்டார்கள். இந்த தருணத்தில் சமுதாய கால்நடை ஊக்குநர் சசிகலாவுடன் தொடர்பு கொண்டேன். அவர் உடனே வந்து எடை போட்டு பார்த்ததில் 22 கிலோ இருந்தது. இதனால் எனது ஆட்டை ரூ. 8300க்கு விற்க முடிந்தது. இதன் மூலம் எனக்கு ரூ. 1800 லாபம் கிடைத்தது.

கால்நடைகளுக்கு வரும் அவசர சிகிச்சைக்கு வாகனம் பிடித்து ஏற்றி செல்லும் நிலை மாறி நாங்களே மூலிகை வைத்யம் சசிகலா உதவியுடன் செய்ய முடிகிறது. இதனால் மருத்துவ செலவு முற்றிலும் குறைந்து விட்டது. மற்றும் எங்கள் ஊரில் நடைபெற்ற மருத்துவ முகாமில் ஆடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியும் போடப்பட்டுள்ளது. இதனால் கோமாரி நோய் தாக்காது. இந்த ஏற்பாடுகளை செய்து கொடுத்த ஐபாடு நிறுவனத்திற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

திருமதி ஜி.தர்ஷினி
2/180, கடற்கரை காலனி, கீழவைப்பார்
விளாத்திகுளம் வட்டம்.
தூத்துக்குடி மாவட்டம்–628903
செல் : 6374302582

## யசோதாவின் ஆடு வளர்ப்பு



புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியில் வசித்து வரும் யசோதா என்பவராகிய நான் தாய் தமிழ் என்ற மகளிர் சுய உதவி குழுவில் உறுப்பினராக உள்ளேன். நான் சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் மூன்று நாள் சேவா ஆடு வளர்ப்பு பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றேன். அதன் பின்னர் 2020 ஜனவரி மாதம் கூட்டு பொறுப்பு குழுவில் உறுப்பினராகி ஆடு வளர்ப்பு தொழிற்கடன் ரூ. 40,000 பெற்று 5 பெட்டைஆடுகள்+1 கிடா வாங்கி வளர்த்து வருகிறேன். கடனை 20 மாத தவணைகளில் மாதம் ரூ. 2000 ஆக கட்டவேண்டும். இது வரை நான்கு மாத தவணை செலுத்தியுள்ளேன். இப்பொழுது ஆடு வளர்ப்பு தொழிலை நான் நல்ல முறையில் செய்து வருகிறேன்.

எனது ஆட்டிற்கு வரும் நோய்களுக்கு நானே முதலுதவி சிகிச்சை செய்து வருகிறேன். இதற்கு நான் மருத்துவரை அனுகுவதில்லை. நான் ஆடு வாங்கிய 10 நாட்களிலேயே எனது ஆடுகளில் இரண்டிற்கு கழிச்சல் ஏற்பட்டன. அதனை நான் கொய்யா இலை மற்றும் ஆவார இலையுடன் சீரகம், சின்ன வெங்காயம் அரைத்துக் கொடுத்தேன். கழிச்சல் குணமடைந்தது. பிறகு சமுதாய கால்நடை தன்னார்வலர் திருமதி பத்மாவதியிடமிருந்து மசாலா உருண்டை, குடற்புழு நீக்க மருந்து மாதம் தோறும் கொடுத்து வருகிறேன். இச்சமயம் எனது ஆட்டிற்கு வயிற்றில் மலம் வழியாக புழு வெளியாகும். இந்த மசாலா உருண்டை கொடுத்த பிறகு எனது ஆடுகள் தெளிவாக உள்ளன. எனது ஆட்டிற்கு ஒரு முறை சளிபிடித்தது. இதனால் மூக்கிலிருந்து சளியாகக் கொட்டியது. இதற்கு நானே கண்டங்கத்தரி பழத்தைக் கொண்டும் ஆடு கட்டும் இடத்தில் புகை போட்டு சளியை குணப்படுத்தினேன். இதன் மூலம் நான் கால்நடை மருத்துவருக்கு கொடுக்க வேண்டிய பணம் மிச்சமானது. இந்த ஆடு வளர்ப்பு பயிற்சி பெற்றது எனக்கு மிகவும் உதவியாக உள்ளது. எனது ஆடுகளுக்கு நோய் வந்தால் இனி நானே சரி செய்து விடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது.

திருமதி பத்மாவதியிடமிருந்து நான் 5 கிலோ தீவனம் பெற்று நாள் ஒன்றுக்கு 100 கிராம் வீதம் எனது ஆடுகளுக்குத் தருகிறேன். இந்த தீவனத்தை எனது ஆடுகள் விரும்பி எடுக்கின்றன.

நான் எனது 6 ஆடுகளை நன்றாக வளர்த்து ஒரு வருடத்தில் அதன் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து இதன் மூலம் நான் நல்ல இலாபம் ஈட்ட வேண்டும் என்பது எனது குறிக்கோளாக உள்ளது.

ஆர். யசோதா
க/பெ. ராமு
வடக்கு மணமேல்குடி, மணமேல்குடி,
புதுக்கோட்டை மாவட்டம், செல் :9095199018

## காராம் பசு

என்னிடம் காராம்பசு 3 வது ஈத்து (காங்கேயம் மாடு) விற்பனைக்கு உள்ளது.
மூர்த்தி. அவிநாசி. செல் : 9790030605

## செல்வியின் ஆடு வளர்ப்பு அனுபவங்கள்



புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், கட்டுமாவடி (ஏனாதி)யில் வசித்து வரும் செல்வி என்பவராகிய நான் ஸ்ரீ அம்மன் என்னும் மகளிர் சுய உதவி குழுவில் உறுப்பினராக உள்ளேன். நான் சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் மூன்று நாட்கள் (ஜனவரி 2020) சேவா ஆடு வளர்ப்பு பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றேன். இந்த ஆடு வளர்ப்பு பயிற்சி பெறுவதற்கு முன் 10 ஆடுகள் வளர்த்து வந்தேன். இதில் எனது 7 ஆடுகளுக்கு அரிசி தின்று உப்பிசத்தினாலும் மற்றும் கழிச்சலினாலும் இறந்து விட்டன. நான் கால்நடை மருத்துவரை அழைத்தேன். ஆனால் அவர் வருமுன்னரே எனது 3 ஆடுகள் இறந்து விட்டன. மருத்துவர் மருந்து கொடுத்த பிறகும் சரியான நேரத்தில் இந்த மருந்து கொடுக்கப்படாததால் எனது மீதமுள்ள ஆடுகளை காப்பாற்ற முடியவில்லை. அதன் பின்னர் 2019 நவம்பர் மாதம் கூட்டு பொறுப்பு குழுவில் உறுப்பினராகி ஆடு வளர்ப்பு தொழிற்கடன் ரூ. 40,000 பெற்று 5 பெட்டை ஆடுகள்+ 1 கிடா வாங்கி வளர்த்து வருகிறேன். கடனை 20 மாத தவணைகளில் மாதம் ரூ. 2000 ஆக கட்டவேண்டும். இது வரை 4 மாத தவணை செலுத்தியுள்ளேன். மேலும் என்னிடம் 7 மாடுகளும் உள்ளன. கடந்த ஜனவரி 2020 மாதம் சேவா ஆடு வளர்ப்பு பயிற்சியில் கலந்து கொண்டு 3 நாட்கள் பயிற்சி பெற்றேன். இந்த பயிற்சியில் எங்களது வீட்டருகில் கிடைக்கும் எளிமையான மூலிகைகளைக் கொண்டும் வீட்டில் உள்ள பொருட்களைக் கொண்டும் எனது கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை நானே சரி செய்யக் கற்றுக் கொண்டேன். எனது ஆடு மாடுகளுக்கு நானே

மூலிகை மசால் உருண்டை தயார் செய்து கொடுக்கின்றேன். எனது மாட்டிற்கு மடிநோய் ஏற்பட்டு பால்கறக்கும் பொழுது இரத்தக் கசிவு வந்தது. இதற்கு சோற்றுக் கற்றாழை, மஞ்சள், சுண்ணாம்பு மூன்றையும் அரைத்து 5 நாள் மடியில் காலை, மாலை பூசிவர 5 நாட்களிலேயே சரியானது. இதே போல் எனது ஆட்டை யாரோ காலில் அடித்து விட்டனர். எனது ஆடு நடக்க முடியாமல் கால் நொண்டியது. நான் பூங்கோதை சமுதாய கால்நடை தன்னார்வலருக்கு தொடர்பு கொண்டு செய்து வர செய்தேன். எனது ஆட்டைப் பார்த்தவுடன் திருமதி பூங்கோதை அவர்கள் உளுந்து 100 கிராம், கோழிமுட்டை வெள்ளைக்கரு சேர்த்து பசையாக்கி துணியில் கட்டிவிட்டு இதை 1 வாரம் கழித்து மீண்டும் இவ்வாறு செய்யுமாறு கூறினார். நானும் 1 வாரம் கழித்து அவ்வாறு செய்தேன். ஆடு 2 வாரங்களில் ஓரளவு நடக்க ஆரம்பித்தது. இப்பொழுது முற்றிலும் குணமடைந்தது. இதனால் நான் சி.எல்.வி பூங்கோதைக்கு சேவை கட்டணமாக ரூ. 100 கொடுத்தேன். மேலும் எனது ஆடு கிடா ஒன்று 15 கிலோ இருந்தது. இதனை எடைபோட்டு தரகரிடம் கொடுத்தேன். இதன் மூலம் ரூ. 4500 எனது ஆட்டை விற்றேன். இதில் திருமதி பூங்கோதை அவர்களுக்கு ரூ. 30 கமிசனாகக் கொடுத்தேன். இந்த ஐபாடு மூலம் ஆடு வளர்ப்பு பயிற்சி பெற்றதால் நான் ஆட்டு பராமரிப்பு செலவினை குறைக்க முடிகிறது. நான் எனது மாட்டிற்கு கால்நடை தீவனம் பூங்கோதை மூலம் பெற்று எனது கிடாவுக்கும் மாட்டிற்கும் கொடுத்து வருகிறேன். இதனால் பால் நல்ல தரமாக உள்ளது. ஒரு நாளைக்கு 5 லிட்டர் பால் கறக்கும் எனது மாடு தற்சமயம் 6 – 61/2 லிட்டர் பால் கறக்கிறது. இந்த ஐபாடு மற்றும் சேவா ஆடு வளர்ப்பு பயிற்சி பெருமளவு எனக்கு பயனுள்ளதாக உள்ளது.

செல்வி
க/பெ. பெரியகருப்பன்
ஏனாதி, கட்டுமாவடி அஞ்சல், மணமேல்குடி தாலுகா
புதுக்கோட்டைமாவட்டம்
செல் : 9047776071

## திருமதி இராணியின் ஆடு வளர்ப்பு



என் பெயர் ராணி, தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுகா, அடைக்கதேவன் பஞ்சாயத்து, அடைக்கதேவன் கிராமத்தில் கிழக்கு தெருவில் வசித்து வருகிறேன். சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதார திட்டத்தில் மல்லிகை மகளிர் குழுவில்உறுப்பினராக உள்ளேன். எனக்கு 47 ஆடுகள், 9 குட்டிகள் உள்ளன. முழு நேரமாக ஆடு மேய்ப்பதுதான் என் தொழில். எனது கணவர் கடலில் மீன் பிடிப்பு தொழில் ஈடுபட்டுள்ளார்.

ஐபாடு திட்டத்தின் மூலம் 2 நாட்கள் (17–18 செப்டம்பர் 2019) ஆடு வளர்ப்பு பயிற்சியில் கலந்து கொண்டேன். பயிற்சியில் மசால் உருண்டை தயாரித்தல், குடற்புழு நீக்க மருந்து, மத்தான் தைலம் செய்வது பற்றி தெரிந்து கொண்டேன் . இந்த மூலிகை மருந்துகளை உள்ளூரில் கிடைக்கும் மூலிகை தாவரங்களை வைத்து நானே மாதம் தோறும் தயாரித்து ஆடுகளுக்கு கொடுத்து வருகிறேன் .



இத்துடன் எங்கள் பஞ்சாயத்தில் திருமதி. தமிழரசி, பரிமளா சமுக கால்நடை தன்னார்வலாளர்களாக எங்கள் ஆடுகளை மாதம் தோறும் பார்த்து மருத்துவ உதவி செய்து வருகின்றனர். இதனால் ஆடுகளுக்கு

வரும் சாதரண பிரச்சனைகளுக்கு மருத்துவரை அணுக தேவையில்லை. பயிற்சி சமயம் கொடுக்கப்பட்ட சூப்பர் நேப்பியர் புல் கரணைகளை ஒரு சென்ட் நிலத்தில் நடவு செய்து கிணற்று நீர் பாய்ச்சி வருகிறேன். இதனை வாரத்திற்கு ஒரு தடவை அறுவடை செய்து ஆடுகளுக்கு கொடுத்து வருகிறேன். இது ஆடு வளர்ப்புக்கு மிகவும் உபயோகரமாக உள்ளது.

இராணி
க/பெ. நாகசூரான்
கிழக்குதெரு, அடைக்கதேவன்,பேராவூரணி தாலுகா
தஞ்சாவூர் மாவட்டம் , செல் : 6384701570

## கொரோனா பேரிடர் நிதி

மதுரை மாவட்டம் திருமாணிக்கம் பஞ்சாயத்து மீனாட்சிபுரம் கிராமத்தில் கொரோனா பேரிடர் நிவாரணத்திற்கு கிராமப் பொது நிதியை எடுத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் பகிர்ந்தளித்து இந்தியாவிற்கே முன்னோடியாக திகழும் ஒரு கிராமம். திருமாணிக்கம் மீனாட்சிபுரம்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே உள்ள திருமாணிக்கம் ஊராட்சியைச் சேர்ந்த திருமாணிக்கம் மீனாட்சிபுரம் என்ற கிராமத்தில் கொரோனா பேரிடரால் வேலையிழந்து வாழ்வாதாரம் இழந்து நிற்கும் மக்களின் நிலை அறிந்த அவ்வூர் முக்கிய பிரதிநிதிகள் தன்னார்வலர்கள் ஒன்று கூடி விவாதித்தனர். இதில் பங்குனி மாதம் நடக்கும் திருவிழாவிற்காக ஒவ்வொரு வருடமும் கிராம மக்களிடம் வசூலிக்கும் வரி பணத்தில் திருவிழா செலவு போக மீத முள்ள தொகையை கிராமப் பொது நிதியாக சேமித்து வைத்துள்ளனர். இந்த வகையில் சுமார் 7 லட்சம் ரூபாய் பொதுநிதியாக இருப்பு இருந்துள்ளது. இதிலிருந்து 25 ஆயிரம் ரூபாயை மட்டும் இருப்பு தொகையாக வைத்துக் கொண்டு மீதமுள்ள 6 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயில் அங்குள்ள மொத்த குடும்பமான 225 குடும்பங்களுக்கு தலா 3000 ரூபாயை கொரோனா பேரிடர் நிவாரணமாக பிரித்துக் கொடுக்க முடிவெடுக்கப்பட்டது. அதன்படி அந்த நிதியை மக்களுக்கு பகிர்ந்தளித்தது அக்கிராம மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

நன்றி – இரா செல்வம், 58 கால்வாய் பாசன விவசாய சங்கம்.

## ஆரோக்கிய கசாயம்

இந்த குடிநீரை மூலிகை தேனீராகவும் அருந்தலாம். காய்ச்சலை குறைக்கும். சளி, ஜலதோசம் மாறும். மூச்சுக்குழல் பாதிப்புகளுக்கு நல்லது.

தேவையான பொருட்கள்

1) கீழ்க்கண்ட நான்கு மூலிகைகளில் ஏதாவது இரண்டை மட்டும் சேர்த்துக் கொண்டால் போதும்.

அ) துளசி இலை 50 கிராம்

ஆ) ஆடாதோடை இலை 50 கிராம்

இ) சீந்தில் கொடி இலை, தண்டு 50 கிராம்

ஈ) ஆவாரை இலை 50 கிராம்

2) சுக்கு 10 கிராம், மிளகு 10 கிராம், திப்பிலி 10 கிராம், வெல்லம் 100 கிராம்.

3) எலுமிச்சம்பழ சாறு ஒரு ஸ்பூன் அளவு

### குடிநீர் தயாரிக்கும் முறை:

ஒரு பாத்திரத்தில் ஒரு லிட்டர் அளவு தண்ணீர் எடுத்துக் கொள்ளவும். இதனுள் முதலில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மூலிகைகளில் ஏதாவது இரண்டு மூலிகை இலைகளை மட்டும் எடுத்துக் கொண்டு இலைகளை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி தண்ணீரில் போடவும். இதோடு சுக்கு, மிளகு, திப்பிலி, வெல்லம் இவைகளை தூளாக்கி சேர்த்துக் கொள்ளவும். பின்பு பாத்திரத்தை அடுப்பில் வைத்து கொதிக்க விடவும். இலைகளின் பச்சை வாசம் மாறும் வரை அதாவது சுமார் ஐந்து முதல் ஏழு நிமிடங்கள் கொதிக்கவிடவும். இறக்குவதற்கு முன் எலுமிச்சை சாறை சேர்க்கவும். பின்பு வடிகட்டி அருந்தவும்.

அளவு முறை:

பெரியவர்க்கு 100 முதல் 200 மி.லி. சிறியோர்க்கு 50 முதல் 100 மி.லி. என்ற அளவில் காலை வெறும் வயிற்றில் அருந்தவும்.

திருமதி. தேவிகா
க.நவ்வலடி பஞ்சாயத்து
திசையன்விளைவழி. திருநெல்வேலி மாவட்டம்

## பழச்சாறு அருந்துவதினால் நன்மை

மாண்புமிகு கேரளா மாநில முதல்வர் பிரணாயி விஜயன் நாட்டு மக்களுக்கு கூறியுள்ள செய்தி இந்தியாவில் 121 கோடி பேரில் 10 சதவீதம் தான் தினமும் பழச்சாறு அருந்துகிறார்கள் தினசரி அருந்தினால் ரூ. 3600 கோடி தோராயமாக நாம்

பெப்சி மற்றும் கோகோகோலா குடிக்கும் போது, இந்த 3600 கோடி நம் நாட்டின் பணம் வெளியே செல்கிறது. பெப்சி மற்றும் கோகோகோலா நிறுவனங்கள் சுமார் ரூ. 7000 கோடி வரை ஒவ்வொரு நாளும் பெறுகின்றனர்.

நாம் கரும்புச்சாறு அல்லது இளநீர் அல்லது பழச்சாறுகள் குடித்தால் நம் நாட்டின் ரூ. 7000 கோடி வரை சேமிக்கலாம். நம் விவசாயிகளுக்கு அவற்றை கொடுக்க நம் விவசாயிகள் யாரும் இனிமேல் தற்கொலை செய்து கொள்ள மாட்டார்கள். நாம் பழச்சாறுகள் உட்கொள்ளும் போது ஒரு கோடி பேருக்கு வருமானம் கொடுக்கும்.

ரூ. 10 அல்லது ரூ. 20 வரை கிடைக்கும் பழச்சாறு நாளடைவில் ரூ. 10 அல்லது 5 ரூபாய்க்கு கிடைக்க வாய்ப்புள்ளது.

## ஆரோக்கிய கசாயம் தயார் செய்தல்

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை தாலுகா, குட்டம் கிராமத்தில் 28.04.20 அன்று திருமதி. சித்திரா 10 லிட்டர் ஆரோக்கிய கசாயம் தயார் செய்து 100 நபர்களுக்கு விநியோகித்தார்.

திருநெல்வேலி மாவட்டம், திசையன் விளை தாலுகா, கரிசுத்து உவரி கிராமத்தில் திருமதி. கௌரி சமூக



கால்நடை தன்னார்வலர் 20 லிட்டர் மூலிகை கசாயம் 13.5.20 அன்று 150 நபர்களுக்கு விநியோகித்தார்.

தூத்துகுடி மாவட்டம், முல்லைக்காடு கிராமத்தில் 10.05.20 அன்று திருமதி. ரேணுகாதேவி, அஞ்சனாதேவி, சித்திர செல்வி, 10 லிட்டர் ஆரோக்கிய கசாயம் தயார் செய்து 75 நபர்களுக்கு விநியோகித்தார்.

## கொரோனாவுக்கு எதிர்ப்பு சக்தி மருந்து கொடுத்தல்

தற்பொழுது பரவி வரும் கொரோனா வைரஸினால் ஏற்படும் காய்ச்சல், இருமலுக்கு கீழ்கண்ட மூலிகை கசாயம் தயார் செய்து கொடுக்கலாம்.

சுக்கு 10 கிராம், மிளகு 10 எண்ணம், இவைகளுடன் முடக்கத்தான் ஒரு கைப்பிடி, விஷ்ணுகிரந்தி ஒரு கைப்பிடி சேர்த்து ஒரு லிட்டர் நீரில் கொதிக்க விட்டு தேவையான வெல்லம் சேர்த்து கசாயம் தயார் செய்யலாம். இதனை ஒரு நாளைக்கு 2 வேளை கொடுத்து வர வேண்டும்.

ஆறுமுகம்
எழுவாணி, முக்குளம் அஞ்சல், திருப்புவனம் வழி, விருதுநகர் மாவட்டம், செல் :9943292958

## மாட்டு அம்மை



### நோயின் அறிகுறிகள்

பாதிப்புக்குள்ளான கால்நடைகளுக்கு அதிக காய்ச்சல், அதைத் தொடர்ந்து தலை, கழுத்து, மடி, காம்பு, பிறப்புறுப்பு ஆகிய பகுதிகளில் 2–5 செ.மீ அளவிலான கட்டிகள் தோன்றுதல், பாலின் அளவு வெகுவாகக் குறைதல், நிணமுடிச்சுகள் வீங்குதல், மூக்கு மற்றும் கண்ணிலிருந்து நீர் வடிதல், நெஞ்சுப்பகுதி விரைப்பை மற்றும் பெண் இனப்பெருக்க உறுப்பு வீக்கம் ஆகிய அறிகுறிகள் காணப்படும். கால் மற்றும் மடி விரை வீக்கத்தால் நடப்பதற்கே தயக்கம் காட்டும்.

மாடுகளுக்கு வெளிப்புறம் தோலில் கொப்புளம், கட்டிகளாக உடல் முழுவதும் காணப்படும்.

**நோய் பரவும் விதம்**

பெரும்பாலும், ஒரு சில கொசுக்கள், ஈக்கள் மற்றும் உண்ணிகளின் வழியாக இந்நோய் பரவுகிறது. ஒரு மாட்டிலிருந்து மற்றொரு மாட்டிற்கு நேரடியாகவோ இனச்சேர்க்கையின் போதோ அல்லது அவற்றின் உமிழ்நீர், தீவனப்பாத்திரம் ஆகியவற்றின் வாயிலாகவோ பரவும் வாய்ப்பு சற்றுக் குறைவானது எனினும் பாதிக்கப்பட்ட கால்நடைகளைத் தனிமைப்படுத்துதல் அவசியம். இந்த அம்மை வந்த மாட்டிற்கு வைத்தியம் கீழ்கண்டவாறு கடைபிடிக்கலாம்.

1.குப்பைமேனி இலை ஒரு கைப்பிடி, சோற்றுக்கற்றாழை 4 மடல், வேப்ப இலை ஒரு கைப்பிடி, மஞ்சள் 20 கிராம், மருதாணி இலை ஒரு கைப்பிடி சேர்த்து அரைத்து வெளியே தடவ வேண்டும்.

2. மசால் உருண்டை தயார் செய்து உள்ளுக்குத் தர வேண்டும். மசாலா உருண்டை தயார் (செய்யும் முறை நம் வழி வேளாண்மை பருவம் 22 இதழ்–3ல் கொடுக்கப்பட்டுள்ளது). இதனை 3 நாட்கள் ஒரு நாளைக்கு ஒரு உருண்டை வீதம் தரலாம். 3. நித்தமும் 1/2 கிலோ கம்புமாவில் கம்மங்கூழ் காய்ச்சி ஒரு வேளை மட்டும் தரலாம். 4. காய்ந்த வைக்கோல் மட்டும் தர வேண்டும்.

நன்றி –கால்நடை வேளாண்மை ஜுன் 20 கறவை – 1

## மாடு விற்பனைக்கு

1) 2 பல் 1 ஈத்து அழகிய பெருங்கூட்டு செவலை கிடாரி. 9 நாள் ஆன செவளை காளை கண்ணு (சுழி சுத்தம் நல்ல குணம் கறவைதிரன் கொண்டது). ஒரு நாளைக்கு 5 லிருந்து 6 லிட்டர் கறந்து பார்த்து வாங்கிக்கொள்ளலாம்) விலை மற்றும் வேறு தகவல் தொடர்புக்கு 6384852838 க. பரமத்தி கரூர் மாவட்டம்

**2)** 3 ஆம் ஈத்து அழகிய பெருங்கூட்டு காங்கேயம் மயிலை மாடு, நல்ல குணம், சுழி சுத்தம் 8 மாதம் சினை நிறைவு (மயிலை களை சேர்க்கப்பட்டுள்ளது) கறவைக்கு கால் அணைக்க தேவையில்லை. (பால் ஒரு நாளைக்கு 5 லிட்டர் வரை கறக்கலாம்) காங்கேயம், திருப்பூர் மாவட்டம் விலை 97000/– (அனுசரித்து தரப்படும்) மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் :8056633395 குறிப்பு : மிகவும் சாதுவான குணம், பெண்கள் பிடிக்கலாம் மற்றும் பால் கறக்கலாம், வண்டி மற்றும் உழவு பழக்கம் உள்ளது.

விற்பனைக்கு 3ம் ஈத்து பெருங்கூட்டு மயிலை கிடாரி. கடைபல் முளைப்பு ஆரம்பம். 5 நாட்களின் கன்று ஈன்று விடும். செவளை காளை சேர்க்கப்பட்டுள்ளது. (சுழி சுத்தம் நல்ல குணம் கறவை திறன் கொண்டது. கறவைக்கு கால் அணைக்க தேவையில்லை).

விலை – ரூ. 69,000,

பரமத்தி, கரூர்மாவட்டம். தொடர்புக்கு: 6384852838

## இயற்கை முறையில் பயிர் பாதுகாப்பு

நம் நிலத்தில் பயிரிடப்பட்ட பயிர்கள் நிறைய பாதிப்பிற்கு உள்ளாகிறது. அதில் ஒரு பாதிப்பாக பூச்சித் தாக்குதல் இருக்கிறது. இந்த பூச்சித் தாக்குதலை இயற்கை முறையில் தவிர்க்க நொதித்த ஆமணக்கு கரைசலை பயன்படுத்தலாம்.

**கரைசல் தயாரிப்பு**

5 கிலோ ஆமணக்கு விதைகளை நன்கு அரைத்து 5 லிட்டர் நீருடன் கலந்து மண்பானை அல்லது தொட்டிகளில் 10 நாட்கள் மூடி வைக்க வேண்டும். பின் 10 நாட்கள் கழித்து இந்த கலவையில் இருந்து துர்நாற்றம் தோன்றும்.

**பயன்படுத்தும் முறை**

5 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பானையில் 2 லிட்டர் நொதி வந்த கலவையுடன் 3 லிட்டர் நீர் சேர்த்து நன்கு கலந்து வைத்து கொள்ள வேண்டும். இவ்வாறாக ஒரு ஏக்கருக்கு 5 மண் பானைகள் தேவைப்படும். மண்பானையின் வாய்ப்பகுதி மட்டும் தெரியும் அளவு புதைத்து வைக்க வேண்டும். தென்னந்தோப்பு, பாக்குத்தோப்புகளில் மரத்தின் அருகே புதைத்து வைத்தால் பூச்சிகள் பானையை நோக்கி வந்து விழுந்து அழிந்து விடும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை பூச்சிகளை தூக்கி எறிந்து விட்டு மீண்டும் அதே கரைசலை பயன்படுத்தலாம்.

**கட்டுப்படும் பூச்சிகள்**

கூன் வண்டு, சாம்பல் நிற வண்டு, காண்டாமிருக வண்டு போன்ற பூச்சிகளும், பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்களின் சாம்பல் நிற வண்டையும் எளிதில் கட்டுப்படுத்தலாம். சிறு தானிய பயிர்களில் இக்கரைசலை பயன்படுத்துவதால் விளைச்சல் அதிகரிக்கும். எலிகளின் நடமாட்டம் குறைவாக இருக்கும்.

எஸ். சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர்
அருப்புக்கோட்டை. செல் : 9443570289

**இராஜஸ்தான் கம்பு ரகம்**

சென்ற ஆண்டு சேவாவிடமிருந்து இராஜஸ்தான் கம்பு இரகம் பெற்று 5 சென்ட் நிலத்தில் பயிர் செய்தேன். கம்பு கதிர் நீளம் சுமார் 11/2 – 2 அடி நீளம் காணப்பட்டது. இதனால் நல்ல மகசூல் கிடைத்தது. இதன் விதை என் வசம் உள்ளது.

நம் வழி வேளாண்மை பருவம் 28 இதழ் 4 ல் புதிய திராட்சை ரகம் உருவாக்கிய தத்தாத்ராய் நானாசாகிப் என்பவரைப் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த இரகம் எனக்கு கிடைக்குமா?

ரெங்கராஜன்
மாரடி அஞ்சல் , துறையூர் தாலுகா
திருச்சி மாவட்டம் – 621003. செல் : 9500419552

ஆசிரியர் பதில் : இந்த இரகம் செப்டம்பர் மாதம் கிடைக்கும். மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் சோலாப்பூரில் அந்த கண்டுபிடிப்பாளரை தொடர்பு கொண்டு செல்லலாம்.

## சமுதாய தெழிற்கூடம்



கோயம்புத்தூர் அருகே நரசிம்மநாயக்கன்பாளைய கிராமத்தில் திரு. வெங்கட் சமுதாய தொழிற்கூடம் தொடங்கியுள்ளார். இந்த தொழிற்கூடத்தில் விவசாய சம்மந்தப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளின் முன் மாதிரி கருவிகளை வடிவமைத்து திறன் கூட்ட ஏற்பாடு செய்யப்படும். இந்த தொழிற்நுட்ப கூடத்தை உண்டாக்க தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை உதவியுள்ளது. புதிய கண்டுபிடிப்புகள் சம்மந்தப்பட்ட கருவிகளை மேம்படுத்த திரு. வெங்கட்டுடன் தொடர்பு கொள்ளலாம். திரு.வெங்கட் ஏற்கனவே தென்னை, பனைமரம் ஏறும் கருவியை வடிவமைத்து தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையின் விருது பெற்றுள்ளார். இவருக்கு உறுதுணையாக இவரது குமாரர் ஸ்ரீ வரதன் ஒத்துழைப்பு கொடுத்து வருகிறார்.

திரு வெங்கட், 39/40, வெற்றி வேலன் நகர், பூச்சியூர்
நரசிம்மநாயக்கன்பாளையம், கோயபுத்தூர்–641031
செல் :7845574423, 9944284440

**வட மாநில தொழிலாளர்கள் உருவானது எப்படி?**

கொரோனா பாதிப்பினால் தமிழ்நாட்டிற்கு வந்த வட மாநில தொழிலாளர்கள் அநேகமாக எல்லோரும் சென்று விட்டார்கள். இது தான் சரியான சமயம். தமிழர்கள் விழித்துக்கொள்ள வேண்டும். தமிழக தொழில்துறையின் அனைத்து வேலைகளையும் கைப்பற்றி, தொழில் துறையை தமிழர்கள் கைவசப்படுத்த வேண்டும்.

ஆட்கள் பற்றாக்குறையாலோ, வெகு திறமையானவர்கள் என்பதாலோ வட இந்திய தொழிலாளர்களை தமிழகம் சுவீகரித்துக்கொள்ள வில்லை. தமிழகத்தில் இருப்பவர்கள் யாரும் உழைக்க தயாரில்லை; வட இந்திய தொழிலாளர்கள் வாங்கும் கூலியை போல இரு மடங்கு கூலி வேண்டும். ஆனால் வேலை நேரத்தில் எவ்வளவு தூரம் நழுவ முடியுமோ அப்படி நழுவி நேரம் கடத்த வேண்டும். தினக்கூலிக்கு வேலைக்கு கூப்பிட்டால் ஒரு நாள் வேலையை மூன்று நாளுக்கு இழுக்க வேண்டும். அதுவே இரண்டு ஆள் செய்து முடித்து விட கூடிய வேலைக்கு ஐந்து ஆள் கூலி பேசி, மூன்று பேராக வந்து அரைநாளிலேயே வேலையை முடித்து விடலாம் என்ற எண்ணமுள்ள தொழிலாளர்கள் தனியாரிடம் வேலைக்கு போனால் உழைத்தே ஆக வேண்டும். அதைவிட ஏரிக்கரையிலேயோ, புளியமரத்தடியிலேயோ உட்கார்ந்தோ, படுத்தோ கதை பேசி நேரம் கடத்தும் 100 நாள் வேலைக்கு போனால் போதும் என்ற எண்ணம் உருவாகிவிட்டது. தொழிலாளர்கள் அட்வான்ஸாக காசு வாங்கிக்கொண்டோ, ஏதாவது சாமான் வாங்கவேண்டும் என்று சொல்லி பணம் பெற்றுக்கொண்டு வேலை கொடுப்பவரை அலைய விடும் கொத்தனார்கள், ஆசாரிகள், எலக்ட்ரீஷியன்கள், மெக்கானிக்குகள் ஒரு பக்கம். மதுவிற்பனை, அரசின் இலவச அரிசி திட்டங்களும் தொழிலாளர்களை சோம்பேறி ஆக்கி ஆரோக்கியத்தை கெடுத்துவிட்டன.

நன்றி : வாட்சப் செய்தி

## விதைகள் வாங்க

தட்டைபயறு (கிலோ ரூ.80) , துவரை (கிலோ ரூ. 70), பாசிபயறு (கிலோ ரூ.100) , கொள்ளு (கிலோ ரூ. 50) நாட்டு கம்பு (கிலோ ரூ. 40), விதைகள் தேவைப்படுவோர் கீழ்க்கண்ட முகவரியை அணுகலாம்.

பி.ஆர்.சுப்பிரமணியம்
உழவர் மன்றம், 450, பட்டகாரன் புதூர்,
அன்னூர் தாலுகா, மேட்டுப்பாளையம் (வழி)
கோயம்புத்தூர் மாவட்டம் – 641653
செல் : 9894505188

---

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம் ;

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய் ; |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 200 | 2000 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 150 | 1500 |
| தனிப்பிரதி | 30 | ---- |
| 15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250) + ( கொரியர் செலவு ரூ. 250 ) | 1500 | ---- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா" மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , 2380943

நூல் அஞ்சல்

பெறுநர்

------------------------------------

------------------------------------

------------------------------------

------------------------------------

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in